192

M.L.A. Debates

Official Report

1965 - November

VOL. 32, NO-9

D
V211, 31'N65
N65 .32.9
64929

V211, 31 N65
N65.32.9

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 12th November 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

64929

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பஸ் கட்டண உயர்வு

*3. தனி நபர் கேள்வி—

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க துரித பஸ்கள், தனியார் பஸ்கள் ஆகியவற்றின் கட்டண விகிதத்தை உயர்த்த வேண்டும் என தமிழக அரசு அண்மையில் ஏதேனும் உத்தரவு பிறப்பித்து இருக்கின்றதா ?.

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சமவெளிகளில் ஓடும் சாதாரண பஸ்களில் நபர் ஒருவருக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு அதிக அளவு கட்டணமாக 3 காசும், உயர்வகை இடவசதிகளுடன் கூடிய துரித பஸ்களில் அதைப்போல் இரண்டு மடங்கு கட்டணமும் வசூலிக்கலாம் என்று அரசாங்கம் 1964 மார்ச் மாதத்தில் மாநிலப் போக்குவரத்து அதிகார சபைக்கு ஆணை பிறப்பித்தது. ஆயினும், மாநிலப் போக்குவரத்து அதிகார சபை, பஸ்களை நல்ல நிலைமையில் பேணி வருவதற்கு அப்பொழுது ஆகிவந்த செலவைக் கருத்தில் கொண்டு சமவெளிகளில் ஓடும் சாதாரண பஸ்களில் நபர் ஒருவருக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2.5 காசு கட்டணமும் துரித பஸ்களைப் பொறுத்தவரை அந்த பஸ்ஸின் வகை, அதில் உள்ள இடவசதி நிலைமை, இருக்கைகளின் அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து நபர் ஒருவருக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2.75 காசு முதல் 4.5 காசு வரையுள்ள கட்டணமும் நிச்சயித்தது. அரசாங்கம் நிலைமையை மீண்டும் பரிசீலித்து உதிரிபாகங்கள், எரிபொருள் முதலியவற்றின் விலை ஏறிவிட்டதையும், இதன் விளைவாக பஸ்களை நல்ல நிலைமையில் வைத்து வருவதற்கான செலவும் அதிகரித்து விட்டதையும் கருத்தில் கொண்டு, சமவெளிகளில் ஓடும் சாதாரண பஸ்களில் விதிக்கப்படவேண்டிய அதிக அளவு கட்டண வீதத்தை நபர் ஒருவருக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசாகவும், உயர்ந்த வகை இடவசதி கொண்ட, 35 பேருக்கு மேற்படாத இருக்கைகள் உள்ள துரித பஸ்களில் சாதாரண பஸ்களில் விதிக்கப்படும் கட்டணத்தைப்போல் இரண்டு மடங்காகவும் உயர்த்துமாறு மாநிலப் போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவித்துள்ளது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அரசாங்க பஸ்களுக்கு ஏற்படுகின்ற செலவுகளையொட்டி இந்த பஸ் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்ற அடிப்படையில் தனியார் பஸ்களுக்கும் உயர்த்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதா? அல்லது உயர்த்தவேண்டிய அளவிற்குச் செலவினங்கள் வளர்ந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : செலவினங்கள் வளர்ந்த காரணமாகத்தான் கடந்த 6 மாதகாலமாகத் தனியார் பஸ் ஓட்டுவது கஷ்டமாக இருக்கிறது, கட்டணத்தை மாற்றியாக வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அவர்கள் ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட காரணத்தால், சர்க்கார் பஸ்களுக்கும் ஏற்றவேண்டியிருந்ததே தவிர, சர்க்கார் பஸ்களுக்கு ஏற்ற வேண்டிய அவசியம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் அனுமதிக்கின்ற கட்டணத்தைக் காட்டிலும் மிகக் குறைவான கட்டணத்திலே தனியார் பஸ்களை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள் நீண்டகாலமாக. இப்பொழுது சர்க்காரே அவர்களுக்குத் தேவையான, அதிகமான கட்டணத்தை விதித்துக்கொள்வதற்கு அனுமதி அளித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் சொல்வது முற்றிலும் தவறு. ஒரு கிலோ மீட்டருக்கு மூன்று பைசாவுக்குக் குறைந்து ஓட்டினால் நஷ்டம் ஏற்படும். அண்டை மாநிலங்களிலே இவ்விதமாகத்தான் மூன்று பைசா தான் கொடுக்கப்பட்டு வருகிறது. கேரளாவிலும் சரி, ஆந்திராவிலும் சரி இவ்விதமாகத்தான் இருக்கிறது. வரிகள், எரி பொருள்களின் விலை, ஸ்பேர் பார்ட்ஸ் காம்போனன்ட்ஸ் இவைகளின் விலை உயர்ந்துவிட்டதால் மூன்று காசு போட்டால்தான் கட்டுப்படியாகும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த பஸ் கட்டண உயர்வு சென்னை நகரத்தைப் பொறுத்தவரை இல்லை என்று முடிவு செய்யப்பட்டதா அல்லது, மற்ற நகரங்களிலும் பஸ் கட்டணம் உயர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரம் மாத்திரம் அல்ல மற்ற நகரப்பகுதிகளிலும் உயர்த்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. காரணம் என்னவென்றால் நகரப்பகுதிகளிலே இருக்கக்கூடியவர்கள் அன்றாட வேலைகளுக்கு பஸ்களில் செல்லவேண்டியிருக்கிறது. பஸ் கட்டணத்தை உயர்த்தினால் அவர்களுடைய வாழ்க்கைச் செலவு அதிகமாகிவிடும். ஆனால், மொபசலில் அவகாசம் இருக்கிறது. அவர்கள் எப்போதாகிலும் பிரயாணம் செய்வார்கள். அன்றாட அலுவல்களுக்கு தினம் தினம் பிரயாணம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. சென்னையிலே இருக்கின்ற பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் பொதுவாக கட்டணத்தை உயர்த்தி நம்முடைய மாநில உபரி வருமானத்தை ஈடு செய்வது என்று உத்தேசித்திருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : சென்னையிலிருந்து திருச்சிக்கு போகின்ற எக்ஸ்பிரஸ் டிரெயினிலே ரூ. 9.50 கட்டணம் வாங்குகிறார்கள். அதே சமயத்தில் எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலே ரூ. 12 கட்டணம் வாங்குகிறார்கள். இதனால் மக்கள் அதிகமாக பஸ்களில் போகாமல், ரயிலில் அதிகமாகப் போகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மக்கள் தாராளமாக ரயிலிலே போகலாம். ரயிலுடன் போட்டி போடுவதற்காக பஸ்கள் வைக்கவில்லை. இப்படிப்பட்ட வசதிகள் வேண்டும் என்பவர்கள் பஸ்ஸிலே அதிகக் கட்டணம் கொடுத்து போகலாம். சர்க்கார் பஸ்ஸிலே கொடுக்கப்பட்டிருக்கிற வசதிகள் ரயில் மூன்றாவது வகுப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும்.

திரு. எஸ். முருகையன் : ஒரு கிலோ மீட்டருக்கு மூன்று காசுகளுக்குக் குறைவாக வாங்கினால் பஸ் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் ஓட்டும் திருவண்ணாமலை to சென்னை எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலே ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டரை காசுகள் தான் வாங்கினார்கள். அப்படியிருந்தும் ஒரு நாளைக்கு 150, 200 ரூபாய் லாபம் கிடைக்கின்றது. ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் எந்த புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேறிடத்திற்கு புள்ளி விவரங்களுக்காக போகவேண்டியதில்லை. சர்க்காரே பஸ் தொழில் நடத்துகிறது—எண்ணெய் எரிபொருள் வாங்குகிறது. ஆகவே, சர்க்காருக்கு நிலைமையைப்பற்றி நன்றாகத் தெரியும்.

திரு. து. ப. அழகமுத்து : சாதாரண பஸ்களை விட எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு இரண்டு மடங்கு கட்டணம் வாங்கலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் பஸ்ஸிலே சீட்டுகள் குறைவாகவும் வசதிகள் அதிகமாகவும் வைத்திருக்கிறார்கள். தனியார் பஸ்களில் சீட்டுகள் அதிகமாக வைத்து பாசஞ்சர்களுக்கு வசதி இல்லாமலேயே இரட்டிப்பு சார்ஜ் வசூல் செய்கிறார்கள். அதைப் போக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு மடங்கு என்பது உச்சகட்டம். எல்லோரும் இரண்டு மடங்கு வாங்க முடியாது. அதற்காக ஆர்.டி.ஓ. அதிகாரம் பெற்றுத்தான் வாங்கவேண்டும். யார் இரண்டு மடங்கு கட்டணம் வாங்கவேண்டுமென்றாலும் அவர்களுடைய பஸ்களுக்கு 35 சீட்டுகள் போட்டு வசதிகள் செய்துகொடுத்தால், அவர்கள் வாங்கலாம். இல்லாவிட்டால் 2¾ பைசாவிலிருந்து 4.5 பைசா வரை—ஆர்.டி.ஓ. நிர்ணயம் செய்தபடி வாங்கலாம்.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, சர்க்கார் கணக்கை வைத்துக்கொண்டு தனிப்பட்டவர்கள் கணக்கை எடுத்துக்கொள்வது சரியல்ல. ஏனென்றால், தனிப்பட்டவர்கள் ஒரு பஸ் வைத்திருப்பவர் கூட பெருவாரியான லாபம் பெறுகிறார்கள். அந்த வகையில் ஏழைகளும் நடுத்தர மக்களும்தான் இந்த பஸ்களிலே பிரயாணம் செய்கிறார்கள். மேலும் பஸ் கட்டணம் உயர்ந்தால் இவர்கள் அதிகமாக பாதிக்கப்படமாட்டார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏழைகள், நடுத்தர மக்கள் தினம் தினம் பிரயாணம் செய்வதில்லை. கட்டணம் ஏறியதால் பிரயாணம் குறைந்தால் அதுவும் நல்லதுதான். எண்ணெய், எரிபொருள் முதலியவைகள் இப்பொழுது நாட்டிற்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு. ஒரு பஸ் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதிகமாக பஸ் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் சில ரூட்களில் வரும் லாபத்தை வைத்துக்கொண்டு, சில ரூட்களில் ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அரசாங்க போக்குவரத்து இலாக்காவில் ஸ்பெஷல் பஸ் எடுக்கும்போது அந்த பஸ்களுக்குரிய கட்டணம் உயருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவையெல்லாம் டிடெயில்ஸ் ஆபீப் அட்மினிஸ்ட்ரேஷன். டைரக்டர் அவர்கள் பார்த்து நிர்ணயம் செய்வார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, திருச்சிக்கு செல்லக்கூடிய பஸ்ஸுக்கு அதிகமான ரேட்டாக இருக்கிறதே என்று ஒரு கனம் உறுப்பினர் கேட்டதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். கட்டணத்தைக் குறைத்து ரயில்வேயுடன் போட்டி இட எண்ணம் இல்லாவிட்டாலும், ரேட்டாவது ஓரளவு கொஞ்சம் கட்டுப்படியாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் கனம் அமைச்சருக்கு இல்லையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாம் கொடுப்பது 'பர்ஸ்ட் கிளாஸ்' 'கம்பர்ட்ஸ்'. ஒரு சீட் ரிசர்வ் செய்து நல்ல வசதிகள் செய்து கொடுப்பது. ரயில்வேயில் மூன்றும் கிளாஸ் சீட் ரிசர்வ் இல்லாமல் கொடுக்கிறார்கள். இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் கனம் உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : டீசல் விலை, ஸ்பேர் பார்ட்ஸ் விலை அதிகமாகிவிட்ட காரணத்தால் கட்டணத்தை உயர்த்தி இருப்பதாக கனம் அமைச்சர் சொன்னார்கள். இந்தச் செலவை குறைப்பதற்காக பெரும் பஸ் முதலாளிகள் டீசல் எண்ணெயோடு

மண்ணெண்ணெயையும் கலக்கிறார்கள். அதைப்போல நம்முடைய ஸ்டேட் பஸ்களிலும் மண்ணெண்ணெயை கலந்து ஓட்ட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டீசலோடு மண்ணெண்ணெயைக் கலந்து ஓட்டினால் இன்ஜினில் மண்ணைப் போட்ட மாதிரி தான். அதனால் சர்க்கார் அம்மாதிரி செய்ய உத்தேசம் இல்லை.

192

திரு. வி. எஸ். எஸ். மணி : பஸ்களிலே 'சீட்டிங் அரேன்ஜ்மென்ட்' முன்பாக இருக்க வேண்டுமென்று ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பே உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. நீண்ட தூரம், அதாவது, 70-75 கிலோமீட்டருக்கு மேல் ஓடும் பஸ்களில் சீட் முன்பாக இருக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, செய்யாரிலிருந்து சென்னைக்கு 100 கிலோ மீட்டர் இருக்கிறது. இதற்கு பழைய ரேட் படி 2½ ரூபாய் வாங்கவேண்டும். ஆனால், 2 ரூபாய்தான் நெடுங்காலமாக வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய தற்போதுள்ள கட்டணத்திற்கு மேலேயே இன்னும் வசூலிக்க சர்க்கார் அனுமதித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது சரி அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாரோ ஒருவர் 2 ரூபாய் கட்டணம் வசூலிக்கிறாரா இல்லையா என்ற விவரம் எனக்குத் தெரியாது. பொதுவாக, ஒரு பஸ் ஓட்டவேண்டுமென்று சொன்னால், எண்ணெய் செலவு, மெய்ன்டினென்ஸ், ஸ்டாபீப் செலவு இவையெல்லாம் கணக்குப் பார்த்துத் தான் கட்டணம் நிர்ணயம் செய்ய முடியுமே தவிர, யாரோ ஒருவர் எந்த முறையிலோ, எப்படியோ ஓட்டுகிறார், அம்மாதிரி ராஜ்ய பஸ்களை ஓட்டவேண்டுமென்று சொன்னால், கோடான முறைதான் வந்துவிடும்.

சட்டச்சொற்கள் அகராதி

* 491 **கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழில் சட்டச் சொற்கள் அகராதியை உருவாக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட தனிக்குழுவின் வேலை முடிந்துவிட்டதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அச்சட்டச் சொற்கள் அகராதி வெளியிடப்படும் ?

(உ) அக்குழுவில் பணியாற்றுபவர்களின் பெயர்கள் யாவை ?

[12th November 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. The work has not yet been completed.

(b) Does not arise at present.

(c) 1. Director of Legal Studies, Madras (Chairman).

2. Sri A. Palaniswami, Professor, Law College.

3. Secretary to Government, Law Department.

4. Dr. M. Varadharajan, Professor of Tamil, University of Madras.

5. Dr. A. Chidambaranathan, M.L.C.

6. Sri R. Parthasarathy, Assistant Director (Translation).

7. Sri R. V. Krishna Iyer.

8. Sri P. N. Appuswamy.

9. Srimathi Soundaram Kailasam.

10. Sri M. Shanmugasubramaniam, Deputy Secretary, Legislative Assembly Department.

11. Sri V. Balasubramaniam (Retired Senior Tamil Translator to Government).

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட சொற்கள் அகராதி உருவாவதற்கான கால இலக்கு ஏதாவது வகுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது உருவாக்கப் படுகிற அகராதி எப்போது வெளிவருமென்ற தன்மையாவது தெரிய வருகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு லீகல் டெர்முக்கும் சரியான தமிழ் சொல் போடுவது முக்கியம். கலெக்ஷன் A to D வந்திருக்கிறது. அதற்கப்புறம் லீகல் டெர்முக்கு பொருள் உரை இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு இன்னும் விரிவான வகையிலே இது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. A to N வரை மொழி பெயர்ப்பு ஆகி இருக்கிறது. எப்போது முடியும் என்று சொல்வதற்கு இல்லை. மத்திய அரசாங்கம் ' அஃபிஷியல் லாங்குவேஜ் லெஜிஸ்லேடிவ் கமிஷன் ' அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரி இந்த மாநிலத்திற்கு ஒரு தனிக் கமிஷன் நியமித்து சீக்கிரத்திலே மொழி பெயர்ப்பை முடிக்கலாம் என்பது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஆங்கிலச் சொற்கள் தமிழிலே வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மொழிபெயர்ப்பு செய்கிறது. ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொல் வராவிட்டால், சமஸ்கிருதச் சொல் அந்த இடத்தில் விழுவதைக் காட்டிலும் பழக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களே இருக்கலாம். ஆகவே, தமிழ்ச் சொற்கள் கிடைக்காவிட்டால் பழக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களையே உபயோகிக்க வழிவகை செய்யப்படுமா ?

12th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலமோ, சமஸ்கிருதமோ எது மக்களுக்கு சுலபமாக புரியக்கூடியதோ அதுதான் வைத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : அகில இந்திய அடிப்படையில் சொற்கள் அமைக்கப்படுகிறதா, அல்லது நேரான தமிழில் அமைக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழில்தான் அமைக்கப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, தமிழில் பிற மொழிகள் கலப்பதற்குத் தடை இல்லை. தொல்காப்பியத்தில் ' வடசொல் கிளவி வடஎழுத்து ஓரீஇ ' என்ற விதி இருக்கிறது. நேரான தமிழ்ச் சொல் கிடைக்காத நேரத்தில், பழக்கப்பட்ட ஆங்கிலச் சொல்லை வைத்துக்கொள்ளலாம். இதற்கான முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு தொல்காப்பியத்தைக் கொண்டுவருவது அவசியம் இல்லை. எந்தச் சொல்லை உபயோகித்தால் மக்கள் புரிந்து கொள்வார்கள் என்பதுதான் முக்கியம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் வரும் மசோதாக்கள் தமிழிலேயே வர முயற்சி எடுத்துக்கொண்டால் நீதிபதிகள் வழக்கறிஞர்கள் அவைகளை நன்றாக பயன்படுத்திக்கொள்வதற்கு முடியும். ஆதலால், மசோதாக்களை தமிழிலேயே பிரசுரிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்பு இந்த வேலை முடிய வேண்டும். இல்லையென்றால் மசோதாவில் தவறுதலான எழுத்து வந்து, விபரீதப் பொருள் ஏற்பட்டு விட்டால், பின்னால் பெரும் பாதகம் ஏற்படும்.

திரு. வை. சங்கரன் : ஆங்கில மொழி அன்னிய மொழி என்பதாலும், சமஸ்கிருத மொழி நம் நாட்டு மொழி என்பதாலும், சரியான தமிழ்ச் சொற்கள் கிடைக்காதபோது ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கலாம் சமஸ்கிருதத்தை விட்டு விட்டு, என்று கனம் உறுப்பினர் புலவர் கா. கோவிந்தன் சொன்ன கருத்தை புறக்கணித்து விட்டு நம் நாட்டு மொழியான சம்ஸ்கிருதத்தையே உபயோகிப்பதற்கு சர்க்கார் யோசனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறியிருக்கிறேன். சமஸ்கிருதம் நன்றாயிருக்குமா, ஆங்கிலத்தை எடுத்துக் கொள்வதா, அல்லது உருதுச் சொல்லை எடுத்துக்கொள்வதா என்பதல்ல. எந்தச் சொல்லை மக்கள் சுலபமாக புரிந்துகொள்வார்களோ, அதைப் பார்த்துத்தான் முடிவு செய்யப்பட்டு வருகிறது.

[12th November 1965

திருமலை நாயக்கர் மஹால், மதுரை.

* 492 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. வை. சங்கரன் :
புலவர் கா. கோவிந்தன் :
} கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை திருமலை நாயக்கர் மஹாலை மராமத்து செய்து பாதுகாக்க வேண்டுமென்று கோரி செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சரிடம் மனு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம், எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.
(b) Does not arise.

திரு. கரு. சீமைச்சாமி : திருமலை நாயக்கர் மஹால் ஒரு புராதனமான அற்புதமான கட்டடம். சிமென்ட், இரும்பு, மரம் இல்லாமல் கட்டப்பட்ட அற்புதமான கட்டடம் இப்போது பழுது அடைந்து இருக்கிறது. பழுதுகளைச் சீர்படுத்தி அதை ஒரு நல்ல மியூசியமாக ஆக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமலை நாயக்கர் மஹால் ஒரு அற்புதமான கட்டடம் தான். ஆனால் அங்கே தான் கோர்ட்டுகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தின் பொறுப்பல்ல. நீண்டகாலமாக அங்கே பல கோர்ட்டுகள், இராமநாதபுரம், மதுரை ஜில்லா கோர்ட்டுகள் நடத்தப்பட்டு வருகின்றன. நானே முன்பு ஒரு தரம் சொல்லியிருக்கிறேன், " இம்மாதிரி அங்கே கோர்ட்டுகள் வைத்து நடத்துகிறது an act of vandalism" என்று. ஒரு கோர்ட்டில் இப்போது பழுது பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. கோர்ட்டை வெளியே வைத்து நடத்த வேண்டுமென்றால், அதற்குத் தக்க கட்டடம் வேண்டும். கட்டடம் கட்டவேண்டுமென்றால் ஏராளமான செலவு ஆகும். அதையும் கவனிக்க வேண்டி வருகிறது. இருந்தாலும் உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நிதி ஒதுக்குவது, இப்போதுள்ள நிலைமையில் கொஞ்சம் கஷ்டம். தொடர்ந்து பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டிய விஷயம் இது. இருந்தாலும் திருமலை நாயக்கர் மஹாலை நல்லதொரு சிறந்த கட்டடம் ஆக, எல்லோரும் பார்த்து இன்புறத்தக்க இடமாக அமைக்க வேண்டுமென்பதுதான் சர்க்காரின் கருத்து.

திரு. வை. சங்கரன் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மதுரை கோர்ட்டுகள் வக்கீல் சங்கம் கனம் முதல் அமைச்சரைச் சந்தித்து, இதுபோன்று சுவர் இடிந்து விழுந்திருக்கிறது, உடனடியாக பழுது பார்க்கவேண்டும், இல்லையெனில் கோர்ட்டை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்களா ? அப்படியென்றால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

12th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வக்கீல்கள் சங்கம் விண்ணப்பம் செய்துகொண்டு இருக்கிறார்கள். விண்ணப்பம் செய்யாமலேயே, அரசாங்கத்துக்கு இதில் கருத்து இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, திருமலை நாயக்கர் மஹாலில் உள்ள கோர்ட்டுகள் எல்லாம் அகற்றப்பட்ட பிறகு, அதை இப்போது தஞ்சாவூர் அரண்மனையில் நல்லபடியாக இயங்கும் கலைக்கூடம் போன்று, மாற்றி உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே கோர்ட்டுகள் எல்லாம் அங்கிருந்து காலி செய்யப்பட்டவுடன், அதற்குப் பிறகு அந்த மஹாலை எப்படி வைத்துக்கொள்ளலாம், எதற்காகவாவது உபயோகப்படுத்தலாமா, அல்லது அப்படியே வைத்துக் கொள்ளலாமா என்பதெல்லாம் பின்னால் யோசிக்கப்பட வேண்டிய விஷயம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த மஹாலில் மேல் தளத்தில் வெடிப்புகள் கண்டு ஓரிடம் இடிந்து விழுந்திருக்கிறது. மேலும், மேல் தளம் இடிந்து விழாமல் இருக்க, அதைத் திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உடனடியாகப் பழுது பார்க்க வேண்டிய இடங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், மத்திய அரசினர் நாஷனல் மான்யுமெண்ட்டைப் பாதுகாக்க ஏதாவது நிதி உதவி அளிக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் வசத்தில் இருக்கிற நாஷனல் மான்யுமெண்ட்டை அவர்கள் நிதியிலிருந்து செலவு செய்து பாதுகாத்து வருகிறார்கள். திருமலை நாயக்கர் மஹால் நம் வசத்தில் இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : திருமலை நாயக்கர் மஹாலை நம் ராஜ்யத்தில் ஒரு முக்கிய மியூசியமாக கன்வெர்ட் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமலை நாயக்கர் மஹால் கட்டடத்தை முதலில் காலி செய்யவேண்டும். மியூஸியம் என்றால், மஹாலையே மியூஸியமாக வைப்பதா அல்லது மஹாலுக்குள் மியூஸியம் வைப்பதா என்பது பின்னால் யோசிக்கவேண்டிய விஷயம்.

நெசவு ஆசிரியர்கள்

* 493 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் வேலை பார்க்கும் 'நெசவு ஆசிரியர்கள்' சம்பளத்திற்கும் மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிகளில் வேலை செய்யும் 'நெசவு ஆசிரியர்கள்' சம்பளத்திற்கும் வித்தியாசம் உண்டா ?

[12th November 1965

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : சர்க்காரில் நடத்துகிற உயர் நிலைப் பள்ளிகளில் வேலை செய்கிற தொழில் ஆசிரியர்களுக்கும், மாவட்ட மன்ற பள்ளிகளில் வேலை செய்கிற தொழில் ஆசிரியர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. இரண்டு ஆசிரியர்களுக்கும் ஒரே தகுதி இருந்தும் வித்தியாசம் இருக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வித்தியாசம் ஒன்றும் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் நெசவு, தச்சு போன்ற வேலைகள் தேவையில்லை என்று சர்க்கார் ஏதாவது ஆணை பிறப்பித்திருக்கிறதா ? புதிதாகத் துவக்கப்படும் பள்ளிகளில் இப்படிப்பட்ட வகுப்புகள் துவக்கப் படவில்லை. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவ்த்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

ஆசிரியர்கள் சங்கங்கள்

* 494 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்கள் சங்கங்கள் அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. பி. முருகையன் : ஆசிரியர்கள் சங்கங்கள் சர்க்காரிலே பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லி சில பஞ்சாயத்து மன்றங்களில் ஆசிரியர் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கிறார்கள். சில மன்றங் களில் கூட்டங்களை நடத்த அனுமதி மறுக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர் சங்கங்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை, நிமித்தம் இல்லை. ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன என்றால் கூட்டங்களும் நடைபெறு கின்றன.

உயர்நிலைப் பள்ளிகள்

* 495 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) காம்பக்குடியில் உள்ள மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிக்கு கிராண்ட் கோரி அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

12th November 1965]

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்வியில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கோர் கிராண்ட் அளிப்பது பற்றிக் கேட்டிருந்தேன். இப்போது வந்திருப்பதில் கிராண்ட் ஏதேனும் கேட்டு விண்ணப்பம் வந்ததா என்று இருக்கிறது. கோர் கிராண்ட் ஏதேனும் கோரி விண்ணப்பம் வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

* 496 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் லெப்பைக்குடிக்காடு உயர் நிலைப் பள்ளியின் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனை சீர்திருத்தும் உத்தேசம் அரசாங் கத்திற்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியில் 'மேற்பரப்பு' என்று கேட்டிருந்தேன். ஆனால் இதிலே கட்டடம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெய்யில் காலத்தி லும் உட்காரப் பயன் இல்லாது, மழை காலத்திலும் உட்காரப் பயன் இல்லாது இருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்து பழுது பார்க்க ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது ஓரளவு பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. மேலும் புதுப்பிக்க அரசாங்கம் உதவி அளிக்கும்.

திருமதி சௌதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, உடையார்பாளையம் ஸ்கூலில் கட்டட வசதி போதாமல் கஷ்டப் படுகிறார்கள். ஆகையால் மேலும் கட்டடத்தை விஸ்தரிப்பு செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் அரசாங்கம் என்ன உதவி அளிக்கலாம், ஸ்தலத்திலே எவ்வளவு உதவி எதிர்பார்க்கப்படுகிறது என்று நான் கூற முடியும்.

[12th November 1965

** 497 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட விசேஷக் கல்வி அதிகாரிகளின் கீழ் இயங்கி வரும் கழக உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்க பள்ளிகளாக ஆக்கும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) No decision has been taken so far.

* 498 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are any Municipalities that run schools exclusively for the students of Harijan and other backward communities; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Ramanathapuram Karaikudi and Vellore municipalities run schools exclusively for Harijans. Besides these, the Tiruvannamalai Municipality maintains schools near the Harijan colony catering to the needs of Harijan and other Backward Communities.

(*b*) (i) In Ramanathapuram, a school is located in Kuruvikara Street where Harijans are predominantly residing.

(ii) In Karaikudi, a residential school is maintained exclusively for Harijans and 31 students belonging to Harijan community are studying in the school.

(iii) In Vellore Municipality, two Junior Basic Schools are being run, one at Aruganthampundi and the other at Ambedakar Nagar.

(iv) The Tiruvannamalai Municipality maintains three schools located near the Harijan Colony.

புலவர் கா. கோவிந்தன் : *தலைவர் அவர்களே, ஹரிஜன நலத் துறையில் புதிதாக ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்படக் கூடாது என்று அரசாங்கம் ஏதாவது உத்திரவு பிறப்பித்திருக்கிறதா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *அவ்வாறு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.*

Students Hostels

499 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to construct more hostels for College Students in the State; and

(*b*) if so, the details thereof?

12th November 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal of a *general nature* for the construction of more hostels for College students in the State.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : *ஸார், கல்லூரிகளில் இடம் கிடைத்தும் விடுதிகளில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் அவதிப்படுவதால் முக்கியமான நகரங்களிலாவது விடுதிகளை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *அரசாங்கம் நிர்வகிக்கும் கல்லூரிகள் 13 ; 13-ல் 12 கல்லூரிகளுக்கு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. வட சென்னையில் அமைக்கப்பட்டிருக்கிற மகளிர் கல்லூரிக்குத்தான் ஹாஸ்டல் இல்லை. அங்கு ஹாஸ்டல் அவ்வளவு அவசியம் என்று உணரப்படவில்லை.*

திரு. வை. சங்கரன் : *ஸார், சர்க்கார் கல்லூரிகளைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை. நகரத்தில் இருக்கிற கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் கிடைக்காததால் போதுமான அளவுக்கு ஹாஸ்டல்கள் கட்ட சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *இது கல்லூரி நடத்துகிறவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம். இதற்கு உதவியும் அளிக்கப்படுகிறது. மத்திய சர்க்கார் அளிக்கிறது, யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் அளிக்கிறது. இந்த அரசாங்கத்திலிருந்து அளிக்கப்படுகிறது. அந்த நிதியை மாத்திரம் வைத்துக் கொண்டு கட்ட முடியாது. இதையும் வைத்துக்கொண்டு, அவர்களும் கொஞ்சம் செலவு செய்து கட்டவேண்டும்.*

திரு. எஸ். முருகையன் : *சர்க்கார் நடத்தும் விடுதிகளில் போதுமான மாணவர்களுக்கு வசதி செய்யப்படுகிறதா ? பலர் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வேண்டிய அளவுக்கு இட வசதி அளிக்க சர்க்கார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *எல்லோருக்கும் வசதி அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. எவ்வளவு தூரம் இதற்கு நிதியைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டப்பட்டிருக்கின்றன.*

புலவர் கா. கோவிந்தன் : *தலைவர் அவர்களே, மவுண்ட் ரோடில் உள்ள கலைக் கல்லூரியில் விடுதியானது சிறிய அளவில்தான் இருக்கிறது. 60-70 பேர்களுக்கு மேல் இருக்க இடம் இல்லை. இதை மேலும் விரிவாக்க உத்தேசம் இருக்கிறதா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *இப்போது அவ்வாறு உத்தேசம் இல்லை. இது பின்னால் கவனிக்க வேண்டிய விஷயம்.*

[12th November 1965

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இப்போது நம் கிராமப் புறங்களிலெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். பள்ளிகளுக்கு 4-5 மைல் தூரம்கூட குழந்தைகள் நடந்து வரும் நிலைமை இருக்கிறது. கிராமத்தில் இருக்கிற ஹைஸ்கூல்களிலேயும் ஹாஸ்டல்கள் நிறுவ அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி கல்லூரிகள் பற்றியது. உயர்நிலைப் பள்ளிகள் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. முதலில் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டும். ஹாஸ்டல்களுக்கு அவ்வளவு அவசியம் இல்லை என்றுதான் சொல்லுவேன்.

Training in English Language

* 500 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to raise the standard of teaching and learning of English Language in all classes in Schools and Pre-University Courses in Colleges; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The Government have introduced teaching of "English" from Standard III in all schools. Pilot courses in the modern methods of English teaching for Standards III to VIII have been introduced and have been successful. As far as teaching and learning of English courses in Pre-University courses in Colleges is concerned, it is a matter to be considered by the University.

திரு. வை. சங்கரன் : மாணவர்களுடைய தரத்தை உயர்த்துவது மட்டுமல்லாது இப்பொழுது ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் ரிஃப்ரெஷர் கோர்ஸ் மாதிரி நடத்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வளவு தூரம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு ஆன ஆங்கில மொழி பயிற்சியை அதிகரிக்கும் முறையில் பிரிட்டிஷ் கவுன்சில் ஏதாவது உதவி செய்கிறார்களா ? எந்த விதத்தில் உதவி செய்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெரிதும் உதவி செய்கிறார்கள். அவர்களுடைய ஆசிரியர்களை அளிக்கிறார்கள். அவர்கள் உதவியை அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டு வருவது இந்த மாநில அரசாங்கம் தான்.

திரு. வை. சங்கரன் : பொதுவாக ஆங்கிலப் பாடத்தை எடுத்துக் கொண்டால் நோட்ஸை மட்டும் வைத்துக்கொண்டு மனப்பாடம் செய்து விடுகிறார்கள் ; எக்ஸ்ட்ரா ரீடிங் இல்லாததால் தரம் இல்லை

12th November 1965]

என்று சொல்லப்படுகிறது. எக்ஸ்டா ரீடிங்குக்காக தனி வகுப்பாவது வைத்து தரத்தை உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் 4–5 பள்ளிகளுக்குச் சென்று கூர்மையாக கவனித்து வேறு என்ன மாறுதல் வேண்டுமென்று சொன்னால் மேலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாலை நேரக் கல்லூரிகள்

* **501 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரிலும் இன்னும் சில இடங்களிலும் மாலை நேரக் கல்லூரிகள் ஆரம்பித்திருப்பதுபோல் எல்லா மாவட்டங்களிலும் மாலை நேரக் கல்லூரிகள் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில்; அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No. 9-00 a.m.

(*b*) Does not arise.

திரு. ம. கமலநாதன் : அலுவலகத்தில் பணி புரியும் அலுவலர்கள் மாலை நேரக் கல்லூரிகளுக்கு உரிய நேரத்தில் போக வேண்டும் என்று இருந்தும் கூட, அலுவலகத்து தலைமை அதிகாரி குறித்த நேரத்தில் அவர்களை அனுப்புவதில்லை என்ற புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

டாக்சிகள்

**502 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :
திரு. சி. கோதடண்ராம பாகவதர் :** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 14—5—1965-ல் சென்னை நகரில் உள்ள டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் வேலை நிறுத்தம் செய்ததை அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன ?

(உ) இம்மாதிரி வேலை நிறுத்தங்கள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்காக ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A taxi was found parked in a place notified as 'No Parking' area in the Mount Road and when the Reserve Inspector of the Police Flying Squad questioned the Driver, he

[12th November 1965

misbehaved and created a fuss which ultimately resulted in a strike by all taxis drivers.

(c) The officials of the Tamilnad Taxi and Autorickshaw Drivers' Union have already been warned of the penalties of an illegal strike.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அடிக்கடி இம்மாதிரி ஸ்ட்ரைக் ஏற்படுவதற்கு போலீஸ் தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, போலீஸ் படையினரையும், இவர்களையும் விசாரித்து யார் தவறு செய்கிறார்கள் என்று கண்டுபிடிப்பதற்கு இதுவரையில் ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய டாக்ஸி டிரைவர்கள் முற்றிலும் கட்டுப்பாடு இல்லாதவர்கள். அவர்களைப்பற்றி எனக்கு வருகின்ற புகார்கள் கணக்கு வழக்கு இல்லை. சென்னை நகரத்திற்கு ஒரு இழுக்கு கொண்டு வருகிறவர்கள் யார் என்று சொன்னால் இந்த டாக்ஸி டிரைவர்கள் தான். சட்டமன்ற உறுப்பினர்களும், பொது மக்கள் எல்லோரும் அவர்களுக்கு எந்தவிதமான ஆதரவும் கொடுக்காமல் இருந்தால் அவர்கள் தங்களுடைய கடமைகளை உணர்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷா, டாக்ஸி டிரைவர்கள் சங்கம் இருக்கிறது. அடிக்கடி போலீஸ் துறையினருக்கும், டாக்ஸி ஓட்டுகிறவர்களுக்கும் தகராறுகள் ஏற்படுகின்றன. இம்மாதிரி தகராறுகள் ஏற்படும் பொழுது ஒரு சுமுகமான முடிவு ஏற்படுகின்ற அளவுக்கு, போலீஸ் துறையினரைச் சேர்ந்த இருவர், மூவர், சங்கத்தைச் சேர்ந்த இருவர், மூவர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவினர் இப்படிப்பட்ட பிரச்னைகளை கவனித்து, அவர்களுக்குள்ளேயே கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தலாம். அப்படிச் செய்தால் அடிக்கடி இத்தகைய வேலை நிறுத்தங்களைத் தவிர்ப்பதற்கு வழி ஏற்படமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைவிட ஒரு சிறந்த யோசனை எனக்குத் தோன்றுகிறது. இந்தச் சங்கத்தையே கலைத்துவிட்டு, சட்டப்படி அவர்களை தண்டித்தால், எல்லாம் ஒழுங்காக வந்துவிடும் என்று தோன்றுகிறது.

திரு. வை. சங்கரன் : ஒரு சிலர் டாக்ஸி டிரைவர்களுக்குக் கூட அனுதாபப்படுகிறார்கள். அதில் தவறு இல்லை. ஆனால் பொது மக்கள் சம்பந்தப்பட்ட வரையில், பீக் ஹவர்சில் டாக்ஸி வேண்டும் என்று கேட்டால், ½ மைல், ஒரு மைல் தூரம் போவதற்குக் கேட்டால், கண்டிப்பாக அவர்கள் மறுத்துவிடுகிறார்கள், அவர்கள் டாக்ஸியை ஓட்டிக்கொண்டே போய்விடுகிறார்கள், நிறுத்துவதே கிடையாது . . . .

12th November 1965]

MR. SPEAKER : The hon. Member need not enter into the details about the offences committed by the taxi drivers. The question is how best the defects could be rectified.

திரு. வை. சங்கரன் : அதனால் பொது மக்களுடைய கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

(பதில் இல்லை.)

திரு. கரு. சீமைச்சாமி : டாக்ஸி டிரைவர்கள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன். . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் நேராக உபகேள்வியைப் போடவேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : எந்த டாக்ஸியில் ஏறிப்போனாலும் சரி, நடுவில் ஒரு ஐந்து நிமிஷம் எங்கேயாவது கொஞ்சம் நிறுத்த வேண்டுமென்று சொன்னால், அவர்கள் நிறுத்துவதில்லை. இம்மாதிரி தகராறுகள் அடிக்கடி வருகின்றன.

MR. SPEAKER : The hon. Member need not go into the details.

திரு. கரு. சீமைச்சாமி : இம்மாதிரி புகார்கள் வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

MR. SPEAKER : It is only a suggestion.

திரு. எம். எஸ். மணி : டாக்ஸி டிரைவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் இல்லை, நல்லவர்களும் இருக்கிறார்கள். போலீஸ் உயர்தர அதிகாரி ஸார்ஜெண்டை தினந்தோறும் 10 டாக்ஸிகளையாவது சார்ஜ் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வதன் காரணமாகத் தான் இப்படிப்பட்ட மோதல்கள் ஏற்பட்டு, வேலை நிறுத்தத்திற்கு இடம் அளிக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அம்மாதிரி உத்தரவு ஒன்றும் கிடையாது என்று நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். எந்தக் காலத்திலாவது, எப்படியாவது போலீஸ்காரர்கள் இத்தனை கேஸ்கள் பிடிக்கவேண்டும், இத்தனை பேர்களை சார்ஜ் செய்ய வேண்டும் என்று முன்பு சொல்லியிருந்தாலும், கடந்த 5, 6 ஆண்டுகளாக, எனக்குத் தெரிந்த அளவில், இந்த விதமாக போலீஸ்காரர்கள் இவ்வளவு டாக்ஸிகளை சார்ஜ் செய்ய வேண்டும், இவ்வளவு பேர்களை பிடிக்கவேண்டும் என்று நம்பர் நிர்ணயம் செய்யப்பட்டதில்லை.

திரு. து. ப. அழகமுத்து : டாக்ஸி டிரைவர்கள் சங்கத்தை கலைத்துவிட்டு, அவர்களை தண்டிக்கலாம் என்று அமைச்சர் அவர்

[12th November 1965

கள் கூறினார்கள். இது போன்றே மற்ற தொழிற் சங்கங்களிலும் தகராறு ஏற்பட்டால், அவைகளையும் கலைத்துவிடலாமா ?

MR. SPEAKER : The question does not arise.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒரேயடியாக டிரைவர்கள் மீது அப்படி பழி சுமத்துவதில் பிரயோசனமில்லை. ஸார்ஜெண்டுகள் வாடகை இல்லாமலேயே வண்டியை ஓட்டிக்கொண்டு போக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும் கனம் அமைச்சர் அவர்கள் விசாரித்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளைப்பற்றி கனம் உறுப்பினர் எப்பொழுதாவது ஒரு ‘ கம்ப்ளெண்டு ’ எழுதியிருக்கிறார்களா ?

திரு. எஸ். ஜே. ராமசாமி : நான் சொல்லவேண்டியதில்லை. நான் என்ன டாக்சி ஓட்டுகிறேனா ? டிரைவர்களை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

கனம் சபாநாயகர் : யாராவது புகார் கொடுத்தால்தானே விசாரிக்க முடியும் ? இவ்விஷயத்தைப்பற்றி திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தால் என்ன பிரயோசனம் ?

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னை நகரத்தில் அடிக்கடி இப்படி ஸ்ட்ரைக் நடப்பதால், பொது மக்களுக்கு அதனால் இடைஞ்சல் ஏற்படுவதைக் கருதி, சர்க்காரே டாக்சிகளை வைத்து நடத்து வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காரும் டிரைவர்களை வைத்துத்தான் நடத்தவேண்டியிருக்கும். அதன் காரணமாக பயமாகக்கூட இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : சென்னை நகரத்தில் இருக்கிற டாக்சி டிரைவர்கள் தவறாக நடக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி அடிக்கடி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன என்றும் கூறினார்கள். அப்படி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்த புகார்களை ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போட்டு, விசாரிக்க இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டாக்சி டிரைவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால், கூப்பிட்ட இடத்திற்கு வர முடியாது என்று சொல்லுகிறார்கள், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்கு என்ன விசாரணை இருக்கிறது ? தண்டிக்கவேண்டியது ஒன்று தான்.

12th November 1965]

திரு. எம். எஸ். மணி : சில டாக்சி டிரைவர்கள் சில குறிப்பிட்ட இடங்களுக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மையாக இருந்தால், அதே போல சில சார்ஜண்டுகளும் வேண்டுமென்றே தகராறு செய்கிற காரணத்தினால் . . .

MR. SPEAKER : The hon. Member seems to suggest that the Sergeants may also be furnished. But that cannot justify the taxi drivers committing the offences. அந்தக் கேள்வியை ஏன் திருப்பித் திருப்பி போடுகிறீர்கள் ? நீங்கள் வேறு ஏதாவது கேட்கவேண்டு மானால் கேளுங்கள்.

திரு. எம். எஸ். மணி : டாக்சி டிரைவர்கள் யூனியன், டாக்சி டிரைவர்கள் இப்படிப்பட்ட புகார்களை போலீஸ் உயர்தர அதிகாரி களுக்கு எழுதியனுப்பினார்கள். அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : A separate question may be put.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : ஸ்டேஷனில் வந்து இறங்கிய வுடனே டாக்சி கேட்டால், டாக்சி டிரைவர்கள் வரமாட்டேன் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆளைப்பார்த்து, ‘ என்கேஜ்டு ’ என்று சொல்லிவிடுகிறார்கள். பட்டிதொட்டிகளிலிருந்து வருகிற ஆட்களைப் பார்த்து, ரூ. 3½, ரூ. 4½ என்று குத்துமதிப்பாகக் கேட்கிறார்கள். இந்த இடைஞ்சலைத் தவிர்ப்பதற்கு, பிரயாணி களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு ஆங்காங்கு போலீஸ்காரர் களை நிறுத்தி ஏற்பாடு செய்வார்களா ?

(பதில் இல்லை)

திரு. சி. பொன்னுசாமி : ‘ டாக்சி டிரைவர்கள் வேகமாக ஓட்டு வதற்கும், கொஞ்ச தூரம் உள்ள இடங்களுக்கு வர சம்மதிக்காமல் இருப்பதற்கும் முதல் காரணம், டாக்சி சொந்தக்காரர்கள் அவர் கள் வருமானத்தின் மீது பெர்சென்டேஜ் விகிதத்தில் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கிறார்கள். அதை நிறுத்திவிட்டு, தகுந்த முறை யில் அவர்களுக்கு மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட்டால் இதெல் லாம் நடக்காது என்று அபிப்பிராயப்படுகிறேன். அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : These are all arrangements between the Taxi drivers and the Taxi owners. The Government have no particular responsibility.

திரு. வை. சங்கரன் : நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக இரண்டு, மூன்று காரியங்களை ஒன்றாக வைத்துக்கொண்டு புறப் பட்டால், நடுத்தெருவில் டாக்சி டிரைவர்கள் காத்துக்கொண்டிருக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். ‘ ஆப்ஜக்ட் அசிவ் ’ ஆகிறதில்லை. ‘ ப்ரஸ்ட்ரேட் ’ ஆகிறது. ஆகவே, ஒரு டாக்சி பிடித்தால், கடைசிவரையில் அவர்கள் இருக்கவேண்டும், பாதியில்

[12th November 1965

சாப்பாட்டுக்குப் போகிறேன் அங்கு போகிறேன், இங்கு போகிறேன் என்று காரணம் காட்டி சொல்லி, விட்டு விட்டுப் போகக் கூடாது என்ற ஒரு விதி பிறப்பிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுதான் இன்றைக்கு இருக்கிற சட்ட நிலைமை. அதை அவர்கள் சரியாக செய்வதில்லை என்பதுதான் இப்பொழுது 'கம்ப்ளேண்டு'.

திரு. எ. கே. பாலகிருஷ்ணன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, இத்தனை கேஸ் போடவேண்டும் என்று கண்டிப்பாக நிபந்தனை இல்லை என்று சொன்னார்கள். ஆனால், ஒவ்வொரு வாரத்திலும் ஹெட் கான்ஸ்டேபிள்கள் இன்ஸ்பெக்டரிடம் இவ்வளவு கேஸ்கள் பிடித்தோம் என்று வீக்லி ரிப்போர்ட்டு கொடுக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அவர்கள் மீது சார்ஜ் கொடுக்கப்பட்டு பனிஷ்மெண்டு கொடுக்கப்படுகிறது. அம்மாதிரி புகார்கள் வந்து, அதன் மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா?

கனம் சபாநாயகர்: புகார் வந்தால்தானே விசாரிப்பதற்கு.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எந்த அதிகாரியும் தன்னுடைய மேலதிகாரியிடம் இந்த வாரத்தில் என்ன வேலை செய்தோம் என்று ரிப்போர்ட்டு கொடுப்பார்கள். ஆனால் மேல் அதிகாரிகள் இத்தனை கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்று சொல்லுவதில்லை. அப்படி கேஸ்கள் பிடிக்காததற்கு அவர்கள் பேரில் 'ஆக்ஷன்' எடுப்பதுமில்லை.

Traffic Signal Lights

* 503 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal before the Government to install pedestrian operated signal lights in the State for regulating traffic; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) At present one pedestrian actuated signal has been installed in Madras City on Poonamalli High Road near the Kilpauk Hospital. After studying its working, the system will be extended to other places in the city and the district towns, if necessary.

தமிழ்நாடு வீட்டுவசதிக் கழகம்

* 504 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி முதலிய நகரங்களின் எல்லைக்குள் தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் வாடகைக்கு விடும் பொருட்டு இதுவரை கட்டிய வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

12th November 1965]

(இ) அவைகள் என்ன வாடகைக்கு விடப்பட்டுள்ளன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The number of such houses is 3,106.

(b) A statement [a] is placed on the Table of House.

திரு. எம். எஸ். மணி: இப்படிக் கட்டிய வீடுகளை யாருக்கு வாடகைக்கு விடுகிறார்கள், எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுதான் ஸ்டேட்மென்டில் கொடுத்திருக்கிறது. சில வீடுகள் கவர்ன்மெண்ட் ஸர்வென்டுகளுக்கும், சில வீடுகள் பொதுமக்களுக்கும், இன்னும் சில வீடுகள் ஸ்லம் ட்வெல்லர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதெல்லாம் ஸ்டேட்மென்டில் தனித் தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி: அந்த வீட்டில் குடியிருக்கிறவர்களுக்கு என்ன யோக்யதாம்சங்கள் இருக்க வேண்டும் என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. சேரியிலிருந்து வேறு இடத்திற்கு அனுப்ப வேண்டும் என்று திட்டம் போட்ட பிறகு, சேரியிலிருந்து வருகிறவர்களுக்கு இந்த இடம் கொடுக்கப்படும் என்று செய்யப்படுகிறது. அதேபோல, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், கமிட்டி பார்த்து தேர்ந்தெடுத்து கொடுக்கப்படுகிறது.

மின்சார வசதி

* 505 கேள்வி.—திரு. எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பொம்பலூர் வட்டத்தில் வெங்கலம் தொகுதியில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதியளிக்கப்பட்டுள்ளது?

(இ) இன்னும் மின்சார வசதியளிக்கப்பட வேண்டிய கிராமங்கள் எத்தனை?

(உ) 1964–65-ம் ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) 23.

(இ) 67.

(உ) 8.

திரு. எஸ். மணி: தலைவர் அவர்களே, எங்களுடைய வட்டாரத்தில் மின்சாரம் பயன்படவில்லை. ஒரு ஆண்டு காலமாக மின்சார வேலையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு

a Printed as Appendix on pages 982–987.

இருக்கும் அவசியத்தை உணர்ந்து மின்சாரத்தைத் துரிதமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிதி பற்றாக்குறைதான் காரணம். அதனுல்தான் இந்த ராஜ்யத்திலே இருக்கும் எல்லா இடத்திற்கும் ஒரே ஆண்டிலே விஸ்தரிக்க முடியவில்லை.

*** 506 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் மின்சார சப்ளை ஸ்தாபனங்களுக்கு 1965–66-ல் கடன் வழங்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த ஸ்தாபனத்திற்கு எவ்வளவு கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Yes. The following Private Electric Supply Undertakings have been sanctioned loans so far during 1965–66 for extension of electricity to filter point tube-wells in Thanjavur District under the crash programme to step up agricultural production.

(1) The South Madras Electric Supply Corporation limited.—Rs. 7,98,200.

(2) The Kumbakonam Electric Supply Corporation limited.—Rs. 9,26,600.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மின்சார போர்டு பட்ஜெட் விவாதத்தின்போது, தனியார் ஸ்தாபனங்களுக்கு கடன் கொடுக்கப்போவது இல்லை என்று அமைச்சர் கூறினார்கள். இப்பொழுது எப்படி கொடுத்திருக்கிறார்கள் என்பதை விளக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் கொள்கை, தனியார்களுக்கு மின்சார விஸ்தரிப்புக்கு என்று கொடுப்பதில்லை. ஆனால், இந்த உணவு நெருக்கடியைச் சமாளிக்க, மத்திய சர்க்காரிடமிருந்து, ஃபில்டர் பாயிண்ட் கிணறுகள் அமைக்க வென்று தனியாக ஒரு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே லைசென்ஸ்கள் இருப்பதால், தஞ்சையில் க்ராஷ் ப்ரோக்ராமை அமல் நடத்த கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தனியார் துறைக்கு கடன் வசதி அளித்திருந்தும், பல வருஷங்களாக, சில கிராமங்களில் ஆதித் திராவிடத் தெருக்களுக்கு மின்சாரம் கொடுக்கும் வேலை, உபகரணங்கள் இல்லை என்று சொல்லி, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி புகார்களும் வந்து இருக்கின்றன. கும்பகோணம் கம்பெனிபற்றி அதிலிருக்கும் ஊழல்கள் பற்றி புகார் அதிகம் வந்திருக்கிறது. அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்வது போல புகார் வந்து இருப்பது உண்மைதான். ஆனால், இந்தக் கடன் பணம் ஹரிஜனங்களுக்கு மின்சாரம் கொடுக்க என்று கொடுக்கப்படவில்லை. ஃபில்டர் பாயிண்ட் கிணறுகள் வைக்க மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஃபில்டர் பாயிண்ட் போட மின்சாரம் கொண்டுவரும்போது, ஃபில்டர் பாயிண்ட் போடும் இடத்திற்குப் பக்கத்தில் இருக்கும், ஆதி திராவிடத் தெருக்களுக்கும், அதோடு இணைந்த திட்டமாக மின்சாரம் கொடுக்கப்படும் என்று சொல்லியிருந்தும் சரிவர அப்படிப்பட்ட காரியங்கள் செய்யப்படவில்லை. அதைத் துரிதமாகச் செய்ய சர்க்கார் ஆவன செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கம் துரிதமாகச் செய்வது முடியாது. இந்தப் பணம் இன்ன வேலைக்கு என்று கொடுத்திருக்கிறது. இன்றைக்குக் கொடுத்திருக்கும் 16 லட்சம் சொச்சம் ரூபாய் ஃபில்டர் பாயிண்டுக்கு என்று தனியாக, பிரத்தியேகமாகக் கொடுத்திருக்கிறது. ஃபில்டர் பாயிண்ட் போடவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். பணம் கொடுத்து இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : தனியார் மின்சார ஸ்தாபனங்களை சர்க்காரே எடுக்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது திட்டம் எப்படி உருவாகிறதோ அதைப் பொறுத்து சர்க்கார் கொள்கையளவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே தனியார் மின்சார வசதி செய்து கொடுக்கவில்லை என்றால் சர்க்கார் நடவடிக்கை எடுத்து வசதிசெய்து தருவார்களா என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் மின்சார விஸ்தரிப்புச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால், எல்லா இடத்திற்கும் ஒரே சமயத்தில் விஸ்தரிக்க முடியவில்லை.

திரு. எம். எஸ். மணி : ஸார், இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில்தான் அதிகம் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியார் கம்பெனிக்கும் கடன் கொடுத்திருக்கிறார்கள். மற்ற எலெக்ட்ரிசிடி சில்டங்களைவிட அங்கே அதிகமாக வேலை செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவதூறு சொல்வதற்கு எல்லையே இல்லை. அந்த ஜில்லாவைப் பொறுத்தவரை குறைவான எலெக்ட்ரிசிடிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம், போர்டின் கையில் இல்லாமல், தனியார் கையில் இருப்பதுதான். அதிகமாக செய்யப்படவில்லை என்பதுதான்.

[12th November 1965

குற்றச்சாட்டு. இன்றைக்கு கிராஷ் ப்ரோக்ராம் மூலமே உடனடியாக உற்பத்தியைப் பெருக்க, தனியாகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : தஞ்சாவூர் நெல்லை திருச்சிக்காரர் சாப்பிட மாட்டார்களா ? (சிரிப்பு).

திரு. எஸ். ஜே. ராமசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் எலெக்ட்ரிசிடி சிஸ்டம் என்று இருக்கிறது. அதற்கு பணம் கொடுக்கப்படவில்லை என்றாலும், அதை சர்க்கார் துறையில் எடுக்க வேண்டும் என்பது அங்கே உள்ள கோரிக்கை. அதைச் சிக்கிரம் செய்யாததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் சர்க்கார் கொள்கை, எந்த முறையில் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று இருக்கிறதோ அப்படிச் செய்யப்படுகிறது. துறைகளைப் பற்றி கவலை இல்லை. தனியார் துறையா, சர்க்கார் துறையா என்பது அல்ல பிரச்னை. நம்முடைய லட்சியம் எவ்வளவு சிக்கிரத்தில் நிறைவேறுமோ, உணவு உற்பத்தியைப் பெருக்குவதை எவ்வளவு சிக்கிரமாகச் செய்ய முடியுமோ அந்த முறையில் செய்ய வேண்டும். தஞ்சாவூரில் உணவு உற்பத்திக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்து ஃபில்டர் பாயிண்ட் வேலைகளைச் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : என் தொகுதி ஏர்க்காட்டிலே 64 கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்படாமல் இருக்கின்றது. கிணறு, ரோடு, வீடு இவை எதற்கும் மின்சாரம் இல்லை. ஆகவே, சர்க்கார் உடனடியாக அதைக் கவனிக்குமா என்று அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உடனடியாகக் கவனிப்பதற்கில்லை; ஆனால், சர்க்கார் நிச்சயமாகக் கவனிக்கும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மாநில மின்சாரக் கழகத்தில் ஸ்கீம் சாங்ஷன் ஆகி, கம்பியில்லை என்று வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. கம்பிகள் கிடைக்க வழி வகை செய்யப்படுமா ? கண்டக்டர்கள்பற்றிச் சொல்லுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த மாநில மின்சார போர்டுதான் எத்தனை பட்ஜெட் போட்டாலும், அதற்கும் அதிகமாக செலவழிக்கிறார்களே. இன்றைக்கு நாட்டிலே, அதுவும் குறிப்பாக தமிழ் நாட்டிலே, ஏற்பட்டிருக்கும் விழிப்பு, மின்சாரம் வேண்டும் என்கிற பெரிய ஆவல், ஆர்வம், ஈடுசெய்ய முடியாததாக இருக்கிறது. கொடுத்த கிராமங்களில் அதிகமாக வேண்டும் என்கிறார்கள். அதே சமயத்தில், புதிய புதிய கிராமங்களை எடுக்கவேண்டியிருக்கிறது. 2,000 கிராமங்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் ஒரு ஆண்டில் என்று திட்டம் ஆரம்பிக்கிறோம், ஆனால் அது 3,000, 3,100 கிராமங்களுக்கு செய்யும் நிலை இருக்கிறது. அதெல்லாம் தேவை அதிகமாகிக்கொண்டு இருக்கிறது என்பதை

12th November 1965]

தான் காட்டுகிறது. அதிலே சில பண்டங்கள் பற்றாக்குறையாகப் போய்விடுகிறது. கண்டக்டர்கள், சில சமயங்களில் ட்ரான்ஸ்பார்மர்கள் இவையெல்லாம் தாராளமாகக் கிடைப்பது இல்லை. நம்முடைய தேவை அளவுக்கு பணம் செலவழிக்க முடியவில்லை என்பதுதான் காரணம்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ட்ரான்ஸ்பார்மர்கள், கண்டக்டர்கள் பற்றாக்குறை காரணமாக, டார்கெட்டில் இருக்கும் கிராமங்களில் சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதைச் செய்து கொடுக்கும் வகையில் சர்க்கார் அவர்களுக்கு பரிந்துரை வழங்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போர்டு நடவடிக்கை எடுக்க முடியாது. நிதி வசதிக்கு ஒத்தவாறு வாங்கி வைத்து கனெக்ஷன் கொடுக்கிறோம்.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, மின்சார பம்பு செட்டுகள் வைக்க எக்ரிமெண்ட் செய்கின்ற பாரத்தில், ரூ. 2-30 க்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டிலே அந்த ஸ்டாம்புகள் சென்னையில் தான் கலெக்டர் ஆபீசில் வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. அதை தாலூகா ஆபீசுகளில் அல்லது எஞ்ஜினியரிங் டிபார்ட்மெண்டில் கிடைக்க வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது நிர்வாகத்தில் இருக்கக்கூடிய நடைமுறைப் பிரச்சினை, எழுதி அனுப்பினால், பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை ஜில்லாவிலே, உணவு உற்பத்தியைப் பெருக்க கடன் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்கள் மின்சார விஸ்தரிப்பு வேலையையே துவங்கவில்லை. துரிதமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது அவ்வளவு சுலபமாக செய்ய முடியாது. ஒரு கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுத்திருந்தால், முதலிலே அதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி சர்க்காரிலே எடுக்கவே ஒன்றிரண்டு வருஷம் காலதாமதம் ஆகிறது. நெருக்கடியை ஒட்டி சீக்கிரமாக செய்யவேண்டும் என்று சொல்லித்தான் செயல்படுகிறது. பணம் கொடுத்து 2, 3 மாதங்கள்தான் ஆகிறது. ஆறு மாதங்களில் முடிக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம்.

* **507 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹோகனக்கல் நீர் மின்சார உற்பத்தி திட்டம் சம்பந்தமாக அண்மையில் மைசூர் மாநில அமைச்சரவையுடன் பேச்சு வார்த்தை ஏதேனும் சென்னை அரசாங்கம் நடத்தியதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[12th November 1965

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

Neyveli Lignite Briquette

* 508 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the various uses to which the raw briquette produced at the Briquette and Carbonisation plant at Neyveli can be put; and

(b) whether they can be used with advantage as fuel in steam locomotives, instead of sea-borne coal?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Raw lignite briquettes may be used as an industrial fuel where coal is being used at present.

(b) Tests conducted in this regard are not conclusive.

திரு. வை. சங்கரன் : சுட்ட கற்கரி போக, லிக்னேட்டிலிருந்து வரக்கூடிய வேஸ்ட்டிலிருந்து கான்க்ரிட் செய்யலாம் என்றும், அதைக் கட்டடம் கட்டுவதற்கும், ரோடு போடுவதற்கும் பயன் படுத்தலாம் என்றும் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக ஏதாவது பரிசீலனை செய்யப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'By-products of carbonisation' என்ற வகையில், அதாவது கரி அச்சுகள் செய்கின்ற போது சில உபபொருள்கள் அதிலிருந்து உற்பத்தியாகின்றன. அதைக்கொண்டு என்ன என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி யெல்லாம் ராஜ்ய சர்க்காரிலே ஒரு கமிட்டி போட்டு ஆராயச் சொல்லியிருக்கிறோம்.

வெள்ளைக் களிமண்

*** 509 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், குமளம்பட்டு காட்டில் எடுக்கப்படுகின்ற வெள்ளைக் களிமண் எங்குக் கொண்டுபோகப் படுகிறது?

(இ) அதில் என்ன செய்கிறார்கள் ?

(உ) அரசாங்கத்திற்கு இதில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The white clay mined from the Kumalampattu Reserve Forest is used for the manufacture of fire bricks. The first lessee, M/s. Tube Suppliers (Private), Limited, Madras utilise the clay in their factory, Vadapazhani Refractory Works at Virugambakkam. Chingleput district while the second lessee, Sri G. Pattabi Reddi of Rajampalayam is supplying the white clay to the factories like The Stoneware Pipes (Madras), Limited, Trivellore, Chingleput district, which

12th November 1965]

are engaged in the manufacture of fire bricks. The other lessee, viz., M/s. Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, have not yet commenced mining operations in the areas leased out of them.

(c) A sum of about Rs. 2,800 (rupees two thousand and eight hundred only) per annum is collected from the above three lessees towards dead rent, surface rent and cesses.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : குறைந்த பட்சம் எத்தனை டன் வெள்ளைக் களி மண் கிடைத்தால் அந்த இடத்தில் பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிர்வாகம் சம்பந்தப் பட்டது அல்ல. தொழில் நுட்பம் சம்பந்தப்பட்டது. தனியாகக் கேள்வி போட்டால், அந்த நுட்பம் தெரிந்தவர்களைக் கேட்டுப் பதில் சொல்ல முடியும்.

சர்க்கரை ஆலை

*** 510 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை துவங்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனை யிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், எப்போது, பொதுத்துறையிலா, கூட்டுறவுத் துறையிலா, தனியார் துறையிலா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலை ஒன்றைத் துவக்கும்போது, அதை வட ஆற்காடு மாவட்டத் திலேயே மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கும் தென் வேலூர் பகுதியில், செய்யாறு ரெவின்யு டிவிஷனில் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில விஷயங்கள் தான் பின் தங்கிய பகுதியில் செய்ய முடியும். சில விஷயங்கள் எங்கே இயற்கை வசதி இருக்கிறதோ அங்கே தான் செய்ய முடியும். இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கேற்ற அளவிற்கு எங்கே கரும்பு ஏராளமாகக் கிடைக்குமோ அங்கே தான் தொழிற்சாலை வைக்க முடியும். கரும்பு எவ்வளவு கிடைக்கிறது என்று கமிட்டி போட்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன்படி பார்த்தால், இது வேலூர்-வடக்கு, வேலூர்-தெற்கு; வாலாஜா; ஆரணி தாலூக்காப் பகுதிகளில் வைக்கப்படலாம் என்பது ஒரு கருத்து, மற்றொன்று குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர் வாணியம்பாடி பகுதியிலே வைக்க முடியும் என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

[12th November 1965

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் எத்தனை சர்க்கரை ஆலைகள் துவக்க எண்ணமிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய எண்ணம் ஆறு சர்க்கரை ஆலைகள் வைக்க வேண்டும் என்பது. மத்திய சர்க்காருடைய எண்ணம் இன்னும் புரியவில்லை.

திரு. எஸ். முருகையன் : வட வேலூர் பகுதியில் ஆம்பூருக்கு அருகில் ஏற்கெனவே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அதற்கும் திருப்பத்தூருக்கும் கிட்டத்தட்ட 15 மைல் தூரம் தான். தென் வேலூர் மாவட்டத்தின் ஏராளமான கரும்பு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, போளூர் தாலுக்காவிலோ, ஆரணி தாலுக்காவிலோ இந்தச் சர்க்கரை ஆலையை வைக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதெல்லாம் நாம் எங்கு வேண்டுமானாலும் வைக்க முடியாது. விவசாய டைரக்டர், சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்ட ஸ்பெஷல் ஆபீசர் போன்ற அதிகாரிகளைப் போட்டு எந்த இடத்தில் வைக்கமுடியும் என்று பரிசீலனை செய்ததில், திருவண்ணாமலை பார்டரில் தான் வரும் என்று தோன்றுகிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலை லைசன்சுக்காக விண்ணப்பித்திருப்பதாக, தருமபுரி மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். தேசீய நெருக்கடி காரணமாக ஏதாவது கால தாமதம் ஏற்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிலே நெருக்கடி ஏற்படாது என்று நினைக்கிறேன்.

Cement Factory at Alankulam

* 511 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the stage to which the preliminary work connected with the setting up of a cement plant at Alankulam near Sivakasi, has progressed?

THE HON. SRI R. VENKATARAMAN : The land acquisition proceedings in respect of the lands required for the Cement Plant are in an advanced stage. Tenders for the supply of machinery for the Plant are under scrutiny of the Government.

கனி வளம்

* 512 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடசேல மாவட்டத்தில் கிடைக்கும் கனிப்பொருள்களைப் பயன்படுத்தும் பொருட்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

12th November 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Due to inadequacy of mineral resources, there is no proposal to start a mineral-based industry in Dharmapuri district.

(*b*) Does not arise.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, வட சேலம் என்று சொல்வதை விட தருமபுரி மாவட்டத்திலே அதிகமான சுண்ணாம்புக் கல் கிடைக்கும், அதிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலை வைக்க வாய்ப்பு இருக்கிறது என்று முன்பு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தோ அல்லது அரசாங்கமோ ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலிலே ஓர் அளவுக்குக் கிடைக்கும் என்று நமக்கு எக்ஸ்பெக்டேஷன் இருக்கும். அதை வைத்துச் சொல்வது உண்டு. அடுத்தபடி, டிடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் செய்த பிறகு முடிவு செய்வது உண்டு. டிடெய்ல்டு இன்வெஸ்டிகேஷனிலே பார்த்ததில், அங்கே அதிகமாக சுண்ணாம்புக் கற்கள் இல்லை என்றும், அதுவும் நல்ல தரமுள்ளதாக இல்லை என்றும் தெரிகிறது. சிமெண்ட் செய்வதற்கேற்ற சுண்ணாம்புக் கல் இல்லை. ஓரிடத்தில் 7 லட்சம் டன் இருக்கிறது. இன்னோர் இடத்தில் 50 ஆயிரம் டன் இருக்கிறது. மொத்தமாக 7½ லட்சம் டன் அளவுக்குத் தான் இருக்கிறது. இதை வைத்து ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்க முடியாது. சுண்ணாம்பு செய்கிற பாக்டரி வைக்க யாராவது முன்வந்தால், அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : சிறிய ரக சிமெண்ட் தொழிற்சாலை, சிறிய ரக சர்க்கரை தொழிற்சாலை வைக்கும் திட்டத்தை ஊக்குவிப்பது என்ற முயற்சிகள் முன்பு நமது அரசாங்கத்திற்கு இருந்து வந்தன. பெரிய தொழிற்சாலையாக வைக்கவேண்டும் என்று கூடச் சொல்லவில்லை. சிறிய தொழிற்சாலைக்காவது ஊக்கம் அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் முன்வந்தாலும் ஊக்கம் அளிக்கப்படும். ஆனால், அங்கே கிடைக்கும் லைம்ஸ்டோன் சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கு அவ்வளவு ஏற்றதாக இல்லை என்று அறிக்கை தெரிவிக்கிறது.

* 513 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have proposed to set up a plant for extraction of magnesium useful for defence and aircraft industries from the magnesite deposits in Salem district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) There is a proposal to set up a production unit for the extraction of magnesium from magnesite. Details have not yet been worked out.

[12th November 1965

கடலூரில் பஸ் டெப்போ

*514 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் பஸ் டெப்போ கட்டும் திட்டம் எந்த நிலையில் இருக்கின்றது ?

(இ) அவ்வாறு கட்டும்போது பிரயாணிகளின் சிற்றுண்டிச் சாலை ஒன்றும் கட்டப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There is no proposal to construct a depot of the Madras State Transport Department at Cuddalore; but a bus stand of the department is proposed to be constructed at the place.

(b) No.

கால்நடை மருத்துவ, விவசாய கல்லூரிகள்

*515 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் கால் நடை மருத்துவக் கல்லூரி ஒன்றும், விவசாயக் கல்லூரி ஒன்றும் நிறுவும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக் கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. வை. சங்கரன் : மதுரை சர்வகலாசாலையைப் பொறுத்த வரையில் . . . .

MR. SPEAKER : The main question relates to Thanjavur district. Next question.

தாய்நாடு திரும்பிய இலங்கைவாழ் தமிழர்கள்

*516 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தாய்நாடு திரும்பிய இலங்கை வாழ் தமிழர்கள் ஜில்லாவாரியாக எத்தனை பேர் ?

(இ) அவர்களுள், இலங்கையில் ஏற்பட்ட மொழிக் கலவரங் களின்போது தங்கள் உடைமைகளை இழந்து வந்துவிட நேர்ந்தது குறித்து அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்கள் இழந்து வந்த தொகைக்கு இலங்கை அரசாங் கத்தினிடமிருந்து நமது மத்திய சர்க்கார் மூலம் இந்த அரசாங்கம் நஷ்டஈடு கோரிக்கை கொடுத்ததா ?

2th November 1965]

(எ) ஆம் எனில், அக்கோரிக்கையின்மீது என்ன முடிவு ற்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH :

(a) The number of persons of Indian origin who have turned to this State from Ceylon during the period from 19th ctober 1954 upto August 1965 is given below district wise :—

South Arcot	774
North Arcot	671
Chingleput	345
Coimbatore	195
Kanyakumari	864
Madras City	265
Madurai	2,745
The Nilgiris	7
Ramanathapuram	18,845
Salem	2,670
Thanjavur	7,379
Tiruchirappalli	12,245
Tirunelveli	35,684
Total ..	82,689

(b) None.

(c) No, Sir.

(d) Does not arise.

சாலை அமைத்தல்

*517 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உணவு அமைச்சர் யவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) P.W.D. நிர்வாகத்திலுள்ள குளம், ஆறுகள், வாய்க்கால் ளின் கரைகளில் ரோடுகள் போடுவது சம்பந்தமாக, தஞ்சை ல்லா அபிவிருத்தி கௌன்ஸில் 23-10-1962-ல் நிறைவேற்றிய 7-வது தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை ன்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A copy of the resoluon was received. It is under consideration.

புதிய இருப்புப் பாதைகள்

*518 கேள்வி.—திரு. தா. சின்னசாமி : கனம் உணவு அமைச்சர் யவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சின்ன சேலத்திலிருந்து திருச்சிக்கும் சின்ன சேலத்தி ருந்து செங்கல்பட்டுக்கும் இருப்புப்பாதை அமைப்பதற்கு ான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் முதலிடம் கொடுக்க வண்டும் என்று கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு தேனும் செய்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[12th November 1965

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) No. The State Government have, however, recommended to the Central Government the survey for the construction of the Chinna-Salem-Chingleput railway line during the Fourth Plan period, assigning the first place in the order of priority.

நடமாடும் பல் சிகிச்சை நிலையங்கள்

*519 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை நடமாடும் பல் சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன; எந்தெந்த இடங்களில்?

(இ) அவைகளால் 1964-65-ல் சிகிச்சையளிக்கப் பெற்றவர்கள் முறையே எத்தனை பேர்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இம் மாநிலத்தில் சுற்றிவரும் பல் சிகிச்சை வண்டி ஒன்றுதான் (ஸ்கோடா) உள்ளது. அது சென்னை, அரசாங்க (பொது) மருத்துவமனையைச் சேர்ந்தது.

(இ) இரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்து ஏழு.

9-30 a.m. **திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இப்போது நடமாடும் பல்வண்டி நடமாடிக் கொண்டிருக்கிறதா? அல்லது முடமாகியிருக்கிறதா?

கனம் சபாநாயகர்: கேள்வியே தடுமாறிக்கொண்டிருக்கிறதே! (சிரிப்பு)

திரு. எஸ். ஜே. ராமசாமி: அது போய்க் கொண்டிருக்கிறதா? நின்றுபோய்விட்டதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அதற்கு இப்போது உடம்பு நிலை சரியில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: சார், ஏகப்பட்ட ஸ்டாப்பை அதற்காக நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தும் அது எதற்காக முடங்கி இருக்கவேண்டும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அதற்குச் சில ஸ்பேர் பார்ட்ஸ் தேவைப்படுகின்றன. அவை செகோஸ்லோவேகியாவில் இருந்து வரவேண்டியதாக இருக்கின்றன. அதற்கு அந்நியச் செலாவணித் தேவைப்படுகிறது. அவை வந்த பிற்பாடு நடமாடும்.

திரு. ஆ. கு. சுப்பையா: உடல் நலமான பிறகு எல்லா மாவட்டத்திற்கும் சென்று வர ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கவனிக்கப்படும்.

12th November 1965]

Building for Primary Health Centre, Chinnalappatty

*520 *Q.*—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any site has been donated by the Public for the construction of a building for establishing a Primary Health Centre at Chinnalappatty in Authoor Panchayat Union, Dindigul taluk;

(*b*) if so, when; and

(*c*) whether the work has been taken up for execution?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தை 1963-ல் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால் நன்கொடைப்பத்திரம் 1965, மார்ச் 23-ம் தேதியன்றுதான் பதிவு செய்யப்பட்டது.

(உ) இப்பணியை நிறைவேற்றுவதற்கு இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. சின்னாளப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான மருந்தகக் கட்டிடங்களும் பணியாளர் குடியிருப்புகளும் கட்டுவதற்காக ரூ. 2 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் சென்னையிலுள்ள (கட்டிடத்) தலைமைப் பொறியாளர் தயாரித்து அனுப்பியுள்ளார். இவ் வரை படங்களும் மதிப்பீடுகளும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

ரூரல் டிஸ்பென்ஸரி டாக்டர்கள்

*521 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிளளிப் பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களின் கீழ் நடைபெற்று வரும் ரூரல் டிஸ்பென்ஸரிகளில் பணிபுரியும் டாக்டர்களை அந்தந்த வட்டாரத்திற்குள் மாற்றுவது சம்பந்தமாகவுள்ள விதிமுறைகளில் மாற்றம் செய்யும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) உத்தேசமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கழிவு நீர்க்கால் அமைக்கும் திட்டம்

*522 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கடலூரில் (Drainage Scheme) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதற்கான உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(உ) அதன் வேலை எப்போது மேற்கொள்ளப்படும்?

[12th November 1965

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முதல் (உ) வரை; கடலூர் நகராட்சி கழிவு நீர்க்கால் அமைக்கும் திட்டம்பற்றி ரூ. 27,000 மதிப்பீட்டுச் செலவில் புலனாய்வு நடத்த 1965 ஜனவரியில் அரசாங்கம் அனுமதி வழங்கியது. இப்புலனாய்வு முடிந்த பின்னர், இத்திட்டத்திற்கான செயற்குறிப்புகளைக் குறித்து அரசாங்கம் ஆலோசிக்கும்.

Drinking Water-supply

* 523 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to augment drinking water-supply for Dharmapuri; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) In August 1965 the Government have sanctioned the investigation of a Water-supply Scheme for Dharmapuri. The Government will examine the proposals for sanctioning the Water-supply Scheme after investigation is completed.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES-TAX (THIRD AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 36 OF 1965)—*cont.*

* **திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, விற்பனை வரி திருத்த மசோதாவை ஒட்டி பேசுகின்றபோது நெருக்கடி நிலைமையையொட்டி நம் மாநிலத்தில் போட்டிருக்கிற வரிகளைப் பற்றியும் என் கருத்துக்களைச் சொல்லிவிட்டு விற்பனை வரி திருத்த மசோதாவைப்பற்றிப் பேச அனுமதி கேட்டுக் கொள்கிறேன்.

நெருக்கடி நிலைமையையொட்டி நம் மாநிலத்தில் விதிக்க இருக்கிற வரிகளைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலாவதாக மின்சார வரி மூலமாக 2½ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அடுத்து பெட்ரோல், டீசல் மூலமாக வரி ½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்றாவதாக தண்ணீர்த் தீர்வை, நிலத் தீர்வை சர்சார்ஜ் 25 சத விகிதம் மூலமாக 1½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான்காவதாக, விற்பனை வரியைச் சிறிது உயர்த்துவதன் மூலமாக 3½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆக மொத்தம் 8 கோடி ரூபாய்க்கு இந்த நெருக்கடி நிலைமையை யொட்டி வரி விதிக்கப்பட இருப்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வரிகள் நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் போடப்படுகிறதா என்று பார்க்கிறபோது அதிலே

NAIL 31 Nov

Nb5.32.9

12th November 1965] [திரு. து. ப. அழகமுத்து]

கொஞ்சம் ஐயப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் தந்துள்ள காரணங்களை வைத்துக் கொண்டு பார்க்கிறபோதே இவை நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் போடப்படுகிற வரி அல்ல என்ற எண்ணம் எழுகிறது. எல்லோரும் கூறியது போல் திட்டக் கமிஷன் திட்டத்தின் தேவைகளை யொட்டி இந்த வரிகளைப் போட வேண்டும் என்று முன்பே கூறியிருக்கிறார்கள் என்ற காரணம் ஒன்று. அதற்கு அடுத்தாற்போல முதல் அமைச்சர் அவர்கள் தம் உரையில் இந்த வரிவிதிப்புக்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "நாட்டில் செலாவணி வீக்கச் சக்திகளை உண்டு பண்ணாமல் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் நாடு எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும்" கருத்தில் கொண்டு இந்த வரி விதிக்கப்படுகிறது என்கிறார். ஆகவே, செலாவணி வீக்கம் ஏற்பட்டு வருவதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்கிறார்கள். திட்டத்தின் காரணமாக செலாவணி வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் குறிப்பிடுகிறபோது அது பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது என்று கூறி வந்தவர்கள் இன்றைக்கு செலாவணி வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டுள்ளதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். "மத்திய அரசாங்கத்திடமிருந்து மூன்றாவது திட்ட காலத்தில் சுமார் 154 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே, மத்திய வரியினங்களின் பங்கின் மூலமும், சட்ட பூர்வமான மானிய உதவித் தொகைகள் மூலமும், கிட்ட வாய்ப்பு இருந்ததற்கு மாறாக, நிதிக் கமிஷன் சிபார்சை ஒட்டி அடுத்த ஐந்தாண்டுகளில் நமக்கு 207 கோடி ரூபாய் சொச்சம் வர இருப்பதையும் குறிப்பிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்கள். அப்படியானால் 56 கோடிக்கும் அதிகமாகக் கிடைக்கிறது. இந்த 56 கோடி ரூபாயும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் செலவிடப்படுமா என்றால் அப்படிச் செலவிடப்பட இருப்பதாகத் தெரியவில்லை. மூன்றாவது திட்ட காலத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள அதிகச் செலவுகளை சரிகட்டப் பயன்படுத்திக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

64929

நம்முடைய இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஏற்பட்டுள்ள 7 கோடி ரூபாய் பற்றாக்குறையைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே இப்போது போட்டிருக்கிற வரி நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க போடப்[illegible] துண்டு விழுந்ததைச் சரிக்கட்டுவதற்கும், மூன்றாவது ஐ[illegible] திட்ட அதிகச் செலவை சரிகட்டுவதற்கும், செலாவணி வீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காகவும் ஏற்பட்டது. இன்னும் கொஞ்சம் அதிகமாகப் போய்ச் சொல்வதனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வரி போடப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நெருக்கடி நிலைமையை உத்தேசித்து என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கிணறு வெட்ட 3 கோடி, மின்சார பம்பு செட்டுக்கு 1 கோடி கடன், மின்சார விஸ்தரிப்பு முக்கால் கோடி, உணவு உற்பத்தி பெருக்கத்திற்காக 2 கோடி என்று கணக்கைக் கொடுத்து

கஷ்டப்படக்கூடிய நிலைமையை உண்டு பண்ணமல், பொதுமக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்கு ஆக, இந்த வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி உயர்வானது பொதுவாக லக்ஷுரி குட்ஸுக்கு 1 சத விகிதமும், மற்ற எல்லாவிதமான சாமான்களுக்கும், ஃபுட்கிரைன்ஸ் தவிர, ½ சத விகிதமும் சகட்டுமேனிக்கு போடப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி நிலைமையிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குக் கிடைக்கும் நிதி வசதி குறைவாக இருக்கும் காரணத்தால் நம்முடைய முன்னேற்றத் திட்டங்களுக்கு நாமே நிதி வசதி தேடக்கூடிய வகையிலே, நாமே நிதியைப் பெருக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்த வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் காரணம் சொன்னர்கள். அந்த முறையிலே இந்த சேல்ஸ்டாக்ஸ் சம்பந்தப்பட்ட வரியும் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பொதுமக்கள் இதைக் கொடுக்கவேண்டிய அவசியமிருக்கிறது, கண்டிப்பாகக் கொடுத்தாகவேண்டும் என்று சொல்லலாம். இந்த் வரி உயர்வு எல்லாம், ½ சத விகிதம், 1 சதவிகிதம் எல்லாம் நாங்கள் கொடுப்பது என்றும், எங்கள் தலையில் சுமையாக விழுகிறது என்றும் வியாபாரிகள் சொல்வது பொருத்தமல்ல. விற்பனை வரியை எடுத்துக் கொண்டால், வியாபாரிகள் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்துதான் கொடுக்கிறார்களே தவிர, வியாபாரிகள் தங்களுடைய கையிலிருந்து கொடுக்கவில்லை. விற்பனை வரியில் 1 பைசா, 2 பைசா அதிகமாகிறது என்றல் அதைப் பொதும்க்களிடமிருந்து வியாபாரிகள் வாங்கி, டிரான்ஸ்ஃபரிங் ஏஜென்ட்ஸ் மாதிரி சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே அவர்கள் நேரடியாகப் பாதிக்கப்படமாட்டார்கள். வியாபாரிகள் கஷ்டப்படவேண்டியதில்லை. ஆனல் வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னல் அதற்கு இரண்டு அடிப்படை இருக்கிறது. இல்லையென்று சொல்ல முடியாது. நேரடியாகப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டாலும், வியாபாரிகள் மறைமுகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக வட ராஜ்யங்களிலிருந்து பல சரக்குகள், சாமான்கள் வருகின்றன என்றல், அங்கேயுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்த வியாபாரிகள் ஆயிரக்கணக்கில் மொத்தமாக வாங்குகிறார்கள். அவர்களிடமிருந்து 10 மூட்டை முதல் 100 மூட்டை வரை நடுத்தர வியாபாரிகள் வாங்குகிறார்கள், கடைசியாகத்தான் சில்லரை வியாபாரிகள் கையில் வருகிறது. அப்படி வரும்போது மூன்று கை மாறுகிறது—"ப்ளேஸ் ஆப் ஆரிஜன்" மொத்த வியாபாரிகள், நடுத்தர வியாபாரிகள், கடைசியாக சில்லரை வியாபாரிகள். இதனல் ஒவ்வொரு கை மாறும் போதும் 2½ கூட்டிக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனல் சில்லரை வியாபாரிகள் நடுத்தர வியாபாரிகளை அணுகாமல் நேரடியாக மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கும் நிலைமை ஏற்படுகிறது. அந்த அளவுக்கு அனுகூலம் உண்டு என்று சில்லரை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடமிருந்து நேரடியாக வாங்கி

விடுகிறார்கள். இதனல் நடுத்தர வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். விற்பனை வரி உயரும்போதெல்லாம் நடுத்தர வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். லோகநாதன் ரிப்போர்ட்டில் இந்த வரியை 1 சத விகிதமாக ஆக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டது. இதனல் மொத்தத்தில் வரி குறைந்தாலும் வியாபாரிகள் சரிவரக் கொடுக்கவில்லை என்று சொன்னர்கள். அதிலும் உண்மையும் நியாயமும் இருக்கிறது. விற்பனை வரியின் மூலம் 14, 15 கோடி ரூபாய் எதிர்பார்த்தார்கள். ஆனல் இன்றைக்குள்ள நிலையில் 25, 30 கோடி வரை வந்து கொண்டிருக்கிறது. அவ்வளவும் இன்று திட்டங்களுக்கு பயன்படுவதைப் பார்க்கும்போது அதிகமாக வருவதை ஆட்சேபிக்கக்கூடாது, வரவேற்கத்தான் வேண்டும். இந்த வரி உயர்வு நெருக்கடி காலத்திற்கு மட்டுந்தான் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறவேண்டும். நெருக்கடி காலத்தில் விலை ஏறுவது இயற்கையான அம்சம், அதை யாரும் நிறுத்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அந்த அளவுக்குப் பொருள்களின் விலை உயர்ந்ததால்தான் மக்கள் தேவைக்குமேல் வாங்க மாட்டார்கள் என்ற காரணத்தையும் சொன்னர்கள். அந்தத் தத்துவ் அடிப்படையில் இந்த வரியை உயர்த்துவதில் தவறில்லை என்று சொன்னர்கள். ஆகவே நெருக்கடி இல்லாத சமயத்தில் இந்த வரியை உயர்த்துவதிலே ஜஸ்டிபிகேஷன் கிடையாது என்று அவருடைய வாதத்திலே இருந்தே தெரிகிறது. ஆகவே, நெருக்கடி நிலைமை இருக்கும் வரை இந்த வரி இருக்கும்; நெருக்கடி தீர்ந்தவுடன் இந்த வரி எடுக்கப்பட்டு விடும் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூற வேண்டும். இந்த நெருக்கடி சமயத்தில் இந்த வரியினல் பாதகம் இல்லை, வரவேற்க வேண்டிய ஒன்று என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. வி. சீராமுலு : கனம் தலைவர் அவர்களே, 1951-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த விற்பனை வரியைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலே 8½ கோடி ரூபாய்க்கு வரி விதிப்பதாகச் சொல்லி வரிகளையும் போட்டுள்ளார்கள். இந்த வரி விதிப்பைக் கணக்கிடும்போது ஒவ்வொரு விவசாயியும் விவசாயம் செய்யும்படியான சூழ்நிலையில் இருந்து வியாபாரியின் கையில் வரும் அளவு பார்க்கும்போது 30 சத விகிதம் பொருள்களின் விலை கூடுதலாகிறது. நிலவரி, நீர்க்கூலி, மின்சாரம், வேண்டுமானல் அதற்கு வேண்டிய கூலி எல்லாம் சேர்த்தால் இந்த அளவுக்கு வருகிறது. கடந்த 3½ ஆண்டு காலமாக நான் இந்த மன்றத்தில் இருக்கும்போது, ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் விற்பனை வரியைப் பற்றிய அமெண்ட்மெண்ட் வந்து கொண்டே இருப்பதைப் பார்க்கிறேன். அதிலே சில இடர்பாடுகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. கடந்த கூட்டத் தொடரில் ஷெட்யூலில் 1 முதல் 14 வரை உள்ள பொருள்களுக்கு நமது மாநில சர்க்கார் 7 சத விகிதம் வரி போட்டார்கள். அன்டை மாநிலத்தில் 10 சத விகிதம் இருப்பதன் காரணமாக நமது மாநிலத்திலும் 10 சத விகிதமாக

விட்டு ஊர்க்காவல்படை மருத்துவ அதிகாரிகள் ஆகிய இனங்கள் பற்றி கணக்கு அதிகம் கொடுக்கவில்லை. கிணறுகள் வெட்டுவதற்காக 3 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறதென்றால் அது தற்காலிகச் செலவுதானே தவிர, நிரந்தரமான செலவல்ல. நிரந்தரமாகக் கிணறு வெட்டிக் கொண்டிருக்கமாட்டார்கள். அதே மாதிரி மின்சாரப் பம்பு செட்டுகளுக்காகக் கொடுக்கிறார்களென்றால் அதுவும் தற்காலிகச் செலவுதானே தவிர, நிரந்தரமான செலவல்ல. மின்சார விஸ்தரிப்புக்காகவும், உணவு உற்பத்திக்காகவும் ஒதுக்கப்படுகிற தொகைகள்தான் நடை முறையில் நிரந்தரமாக இருக்கக்கூடிய செலவுகளுக்குத் தேவைப்படுகிறது. இவைகளுக்காகத் தேவைப்படுகின்ற செலவுகளுக்காக 8 கோடி ரூபாய் அதிகமாக வரி விதிக்கிறோம் என்று சொல்வது பொருத்தமாக இருக்குமா என்பதைப் பார்க்கவேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய அளவை நெருக்கடி நிலைமையை உத்தேசித்து மாற்றியமைக்கப்போகிறோம் என்பதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நிர்வாகத்திலேயும், சிக்கனப்படுத்தி மிச்சப்படுத்தப் போகிறோம் என்று கூறுகிறார்கள். இந்தக் காரியங்களையெல்லாம் பார்த்தோமானால், இப்பொழுது இந்த வரிகள் தேவையற்றது என்பதையும், இந்த வரிகள் நெருக்கடிக்காகப் போடப்பட்டது என்பதை ஒப்புக்கொள்ள முடியாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போடப்பட்டவைகளில், அதிகமான வருமானம் தரக்கூடிய நிலையிலே இருக்கிற வரிகள் முக்கியமாக மூன்று வரிகள்தான். மின்சாரத்திற்கும் வரி, நிலவரி, தண்ணீர் வரி, விற்பனை வரி இந்த மூன்று இனங்களும்தான் அதிகமான வருமானத்தைத் தரக் கூடியவனவாக இருக்கின்றன. மின்சாரத்தைத் எடுத்துக் கொண்டால் . . .

MR. SPEAKER: Yet the hon. Members please speak on the Bill therefore the House. பட்ஜெட் மீது நடக்கும் பொது விவாதத்தில் பேசுவதுபோல், இந்த விவாதத்தில் பேசக்கூடாது.

திரு. து. ப. அழகமுத்து: தனியாக வேறு பொதுவிவாதம் இல்லாததால் இதில் சொல்கிறேன். வேறு சந்தர்ப்பம் இல்லை.

கனம் சபாநாயகர்: வேறு சந்தர்ப்பம் இல்லை என்பதற்காக அவ்விதம் பேசக்கூடாது. இம் மசோதாவின் மீது விவாதம் நடக்கும்போது இம் மசோதா சம்பந்தமான கருத்துக்களைத்தான் சொல்ல வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து: இந்த மின்சார வரி போடுவதற்கு அவர்கள் கூறிய காரணம் மொத்த முதலீட்டுக்கு 11 சத விகிதம் வருமானம் வந்தால் லாபம் ஆக இருக்குமென்று சொன்னார்கள். 11 சத விகிதம் வருமானம் வரக்கூடிய அளவில் வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதேமாதிரி நிலவரி, நீர் வரிகளுக்கு காரணம் சொல்லுகின்றபொழுது மற்ற வரிகளைவிட இந்த வரிகள் குறைவாக இருக்கின்றன என்ற காரணத்தால் அதிகப்படுத்துகிறோம் என்று கூறினார்கள். சர்க்கார் முதலீட்டுக்கு 11 சத விகிதம் லாபம் வேண்டும் என்பதை சர்க்கார் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் நிலத்தில் முதலீடு செய்வதற்கு விவசாயிகளுக்கு என்ன வருமானம் கிடைக்கிறது? 6 சத விகித வருமானம் கூட விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. இருந்தும் வரி உயர்த்துவது ஏன்? விற்பனை வரியைப்பற்றிச் சொல்லும்பொழுது பண்டங்களை மிச்சப்படுத்துவதற்காக என்ற காரணத்தைச் சொன்னார்கள். வரி அதிகமாக ஆவதின்மூலம் பண்டங்களை வாங்குபவர்கள் அதிகமாக வாங்காமல் மிச்சப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இது எந்த அளவுக்கு சாத்தியம் என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆகவே, இந்த மூன்று காரணங்களையும் கூறி, இந்த மூன்று முக்கியமான வரிகளையும் கூட்டி இருக்கிறார்கள். இன்றைய தினம் ஆலோசனையில் இருக்கிற விற்பனை வரி 2 சத விகிதத்திலிருந்து 2½ சத விகிதமாக உயர்த்தப்படுகிறது. மற்ற ஆடம்பரப் பொருள்களுக்கு ½ சத விகிதமாக வரி உயர்த்தப்படுகிறது. ஆடம்பர பொருள்களுக்கு வரி உயர்வதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அன்றாட உபயோகப் பொருள்களுக்குப் பலமுனை விற்பனை வரி 2½ சத விகிதம் ஆகிறபோது விளைவு என்ன ஆகும் என்பதை அமைச்சர் அவர்களே கூறினார்கள். இதன்மூலம் விலைவாசிகள் உயர்ந்துவிடத்தான் செய்யும், அதைப் பொதுமக்கள் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று கூறினார்கள். விற்பனை வரியை மாற்றியமைக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி அட்வைசரி கமிட்டி ஆலோசனை செய்துவருகிறது. டாக்டர் லோகநாதனிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயங்கள் வந்தபிறகு மாறுதல் செய்யவேண்டுமானால் செய்து கொள்ளலாம் என்ற காரணத்தால்தான் வியாபார ஸ்தலங்களைப் பரிசோதனை செய்யும் அதிகாரம் கொடுக்கும் விற்பனை வரி மசோதாவை வாபஸ் பெற்றோம். ஆகவே, அதற்குள் இந்த நெருக்கடி நிலையைக் காட்டி 2 சத விகிதமாக இருப்பதை 2½ சத விகிதமாக அதிகமாக்கவேண்டிய அவசியம் ஏன் வந்தது என்பது தெரியவில்லை. இந்த வரியின் மூலம் கிடைக்கக்கூடிய ரூபாய் 3½ கோடிதான். இந்த வரி 3½ கோடி ரூபாய் தான் உண்மையாகக் கொடுக்கும் என்றால் இந்த வரியைப் போடவேண்டிய அவசியமில்லை. தற்பொழுது வியாபாரிகள் எல்லோரும் மறைக்காமல் நாங்கள் கணக்குக் கொடுக்கிறோம் என்று வாக்குறுதியளித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் வாக்குறுதியளித்த காரணத்தால் அதிகமாக எப்படியும் 10 கோடியாவது கிடைக்கும். ஆகவே, இந்த நேரத்தில் இந்த வரியை உயர்த்த வேண்டிய அவசியமில்லை. அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் இது பொதுமக்களைப் பாதிக்கக்கூடியதாகும். விலைவாசிகள் உயர்ந்து சங்கடங்களை ஏற்படுத்திவிடும். மோட்டார் சொந்தக்காரர்கள் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டபொழுது, கட்டணத்தை உயர்த்தியதின் மூலம், போர் முயற்சிகளில் அவர்களுடைய ஆதரவை எப்படி சர்க்கார் திரட்டுகிறார்களோ, வியாபாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல், சட்டத்தை வாபஸ்பெற்று, சலுகைகள் செய்து கொடுத்து எப்படி அவர்களுடைய ஆதரவைத் திரட்ட சர்க்கார் முயற்சி எடுக்கிறார்களோ, அதேபோல் இந்த விற்பனை வரியை உயர்த்தி பொதுமக்கள்

முறையில் வரி வசூல் செய்தால் இந்த மசோதாவினால் கசக்கிப் பிழிகிற நிலையை ஏற்படுத்தாமல் இருக்கலாம். இந்த வரி சாதாரண மக்களைத்தான் பாதிக்கும். எனக்கு சில ஐயங்கள் இருக்கின்றன. அதை அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து கவனிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். உணவு தான்யங்கள், அரிசி, கோதுமை போன்றவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது இந்த வரி உயர்விலிருந்து. ஆனால் பருப்பு வகைகளைப் பொறுத்த மட்டில் நமக்குள்ள அனுபவங்களை அமைச்சர் அவர்கள் உணருவார்கள். வெளி மாநிலங்களில் இருந்து பருப்பு வரவழைக்கிறோம். பருப்பு வகைகளும் உணவு தான்யங்களோடு சேர்ந்தவைதான். ஆகவே, பருப்பு வகைகளுக்கும் சலுகை கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை அவர்கள் பதில் உரையில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். பருப்பு வகைகளுக்கும் உணவு தான்யங்கள் போன்று விலக்கு அளிக்கப்படவேண்டும். அரை காசுதான் உயர்த்துகிறோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே பொது விற்பனை வரியாக ரூபாய்க்கு 2 காசு என்றிருக்கிறது. அரை காசுதானே என்று அவர்கள் சொல்லும் நேரத்தில் மிகச் சாதாரணமாகத்தான் தோன்றும். ஆனால் பொது மக்கள் கொடுக்கிற நேரத்தில் எவ்வளவாகிறது என்று பார்க்கும்போது அதுபற்றி என் நண்பர் திரு. சங்கரன் அவர்கள் கூட மிக அழகாக சித்திரம், படம் போட்டுக் காண்பித்தார்கள். பொது விற்பனை வரி இரண்டு காசுகள். ஒரு பொருள் நான்கு கைகளுக்கு மாறுகிறது. அப்படி நான்கு கைகளுக்கு மாறுவதினால் பலமுனை வரி என்று வரும்போது நான்கு தடவை இரண்டு காசுகள் விதம் காசு எட்டு ஆகிறது விற்பனைவரி. இந்த $\frac{1}{2}$ காசும் சேர்ந்தால் முதலில் $2\frac{1}{2}$ காசு ஆகிறது. ஒரு கையில் இருந்து இரண்டாவது கைக்கு போகும் $2\frac{1}{2}$ காசு அடுத்த கைக்கு போகும்போது ஐந்து காசு ஆகிறது. இப்படி நான்கு கைகள் மாறும்போது பத்து காசு ஆகிறது. ஆக மிகத் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் எட்டு காசு என்பது பத்து காசு ஆகிறது இந்த உயர்வினால். ஆகவே, எட்டு பைசா என்பது பத்து பைசா ஆகிறபோது 25 சதவிகிதம் அளவிற்கு வரி உயர்கிறது. ஆடம்பரப் பொருள் மீது 10 சத விகிதம் வரி என்றிருப்பதை 11 சத விகிதமாக உயர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ரேடியோ, ரெப்ரிஜிரேட்டர், கேமரா, மோட்டார் வாகனங்கள், இப்படிப்பட்ட சுக போகப் பொருள்களுக்கு இப்போது 10 சத விகிதத்தில் இருந்து 11 சத விகிதம் போடப்பட்டிருக்கிறது. ஆக 20 ரூபாய்க்கு இரண்டு ரூபாய் கொடுக்கிறோம் என்றால் இப்போது அது 2 ரூபாய் 20 பைசா ஆகிறது. ஆக கூடுதலாக 20 பைசாதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பருப்பு போன்ற அத்தியாவசியமான பொருள்களுக்கு 25 சத விகிதம் அதிகமாகிறது வரி, ஆனால் ஆடம்பரப் பொருள்களுக்கு அதிகமாக ஆவது 10 சத விகிதம்தான். இதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரெப்ரிஜிரேட்டர் போன்ற பொருள்கள் எல்லாம் எல்லா வீடுகளிலும் கிடையாது. மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், ரேடியோ, கிராமபோன் போன்றவை இல்லாமல்

காலத்தை நடத்தலாம். ரேடியோ இல்லாவிட்டால் பூங்காவிற்குச் சென்று பாட்டு கேட்கலாம். வேறு சினிமாக் காரியங்களுக்காகப் போடப்படுகின்றது என்றால் பரவாய் இல்லை. ஆனால், அத்தியாவசியப் பொருட்கள் மீது, வாழ்க்கையில் அன்றாடம் தேவைப்படுகின்ற பொருட்கள் மீது, இந்த மசோதாவின் மூலம் 25 சத விகிதம் வரி உயர்வு ஏற்படுகின்றது. அத்தியாவசியப் பொருட்கள் மீது 25 சத விகிதம், ஆடம்பரப் பொருட்கள் மீது 10 சத விகிதம். இது நியாயம் தானா? இதற்கு என்ன காரணம் என்று நமது அமைச்சர் அவர்கள் தகுந்த சமாதானம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். வேர்க்கடலை மீது $1\frac{1}{2}$ சத விகிதம் என்று போடப்பட்டிருக்கிறது. வேர்க்கடலை என்பது உணவு தான்யம் தான். இது காந்தியடிகளே கூறிய உணவுப் பொருளாகும். ஏதோ உணவுப்பொருட்களுக்கு சலுகை கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு, 50 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கின்றவர்களுக்கு வரி உயர்த்தவில்லை, சலுகை காண்பிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, அதற்கு எதிர்மறையாக செய்திருக்கின்ற வகையில் தான் இப்போதுள்ள வரி முறைகள் அமைந்திருக்கின்றன. ஐம்பது ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது என்று சொன்னார்கள். ஆனால் வாங்குபவர்கள்தான் வரியை கொடுக்கவேண்டியிருக்கிறது. பொதுமக்களின் கடைசி நாடி வரை வந்துதான் இந்த வரி வசூலிக்கப்படுகிறது. அந்த முறையில் பார்க்கும்போது, அத்தியாவசியப் பொருட்கள் மீது 25 சத விகிதம் ஆடம்பரப் பொருட்கள் மீது 10 சத விகிதம் போடுகிறோம் என்று சொல்வது சாதாரண குடிமக்களை, ஏழை எளிய மக்களை பாதிக்கக்கூடிய பிரச்னையாகும். இந்த மசோதாவின் மூலமாக $3\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே வர்த்தகர்கள் கொடுத்த வாக்குறுதியின் பேரில் சரியான முறையில் வரி வசூல் செய்வதற்காகக் கொண்டு வரப்படவிருந்த மசோதா நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இது இல்லாமலேயே ஆறு மாத காலமாக சோதனை போட்டதின் காரணமாக இந்த இலாகாவினர் சுமார் 6 அல்லது 7 கோடி ரூபாய்க்கு வரி ஏய்ப்பவர்களை கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த இலாகாவினருக்கு இன்னும் ஊக்கம் கொடுத்து, இன்னும் நல்லமுறையில் அதிகாரிகள் செம்மையாக இருந்து, இந்த வரியை வசூல் செய்வதாக இருந்தால் இந்த நெருக்கடி காலத்தில் இப்பேர்ப்பட்ட முறையில் வரியை உயர்த்தவேண்டிய தேவையே இராது. இதை கனம் அமைச்சர் அவர்கள் செய்வார்களானால் இந்த மாதிரியான ஒரு மசோதாகூட கொண்டு வரவேண்டிய அவசியமே கிடையாது. ஆகவே, இந்த வரிகளை அருள் கூர்ந்து வாபஸ் பெறவேண்டும், இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோ. வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, வர்த்தகத்துறையில் விலைவாசிகள் உயரும்படியான அளவுக்கு விற்பனை வரி கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று இங்கு பேசப்

பட்டது. இப்போது கொண்டு வந்திருக்கின்ற உயர்வு ஆடம்பர பொருட்கள் மீதும், மற்ற பொருட்கள் மீதும் வருகின்ற பொழுது, அது உற்பத்தியாகின்ற இடத்திலேயே வாங்கக்கூடியவர்கள் பெருகி, இதனுடைய விலை குறையும் என்ற சாத்தியக்கூறை உருவாக்குவோமே தவிர விலைவாசியை உயர்த்தாது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உற்பத்தியாகிற பொருட்கள் ஒவ்வொரு வியாபாரிகளுடைய கைக்கும் மாறி மாறி கடைசியில் உபயோகத்திற்கு செல்லும்போது, வரியும் விலையும் உயர்ந்து கொண்டே போகும். சர்க்காருடைய கொள்கை என்னவென்றால் உற்பத்தியாகின்ற விலையிலேயே பொதுமக்களுக்குப் பொருட்கள் கிடைக்கவேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில்தான் இது போன்ற விற்பனை வரி போடப்படுகின்றது. இதன் காரணமாக விற்பனை வரி செலுத்துகின்றவர்கள் குறைந்து அகவிலைக்கே மக்களுக்கு பொருட்கள் கிடைக்கவேண்டும். இல்லையென்றால் ஐந்து ஆறு வியாபாரிகள் இதை வாங்கி கைமாறி வரும்போது உபயோகத்திற்கு பொதுமக்களிடத்தில் வரும்போது விலை அதிகமாகிவிடுகிறது. இதை மாற்றுகின்ற முறையில்தான் உற்பத்தியாகின்ற விலையிலேயே மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலேயே இம்மாதிரிப்பட்ட விற்பனை வரிகள் கொண்டு வரப்படுகின்றன. அந்த முறையில் இதற்கு சாதகமான சூழ்நிலை உருவாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் வியாபாரத்தில் மத்தியில் இருக்கும் இடைத்தரகர்கள் குறையவேண்டும் என்பதுதான் சர்க்காருடைய கொள்கை. அதாவது avoidance of middle-men —இடையிலுள்ளவர்கள் சரக்கை வாங்கி இருப்பு வைத்து அதிக விலைக்கு விற்று வருகின்ற நிலையை மாற்றி அமைக்கின்ற வகையில்தான் இப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. அப்பேர்ப்பட்ட நிலையை இந்த மசோதா உருவாக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே சர்க்கார் இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ப விற்பனை வரி உயர்வை கொண்டு வந்திருப்பதற்கு என் ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரியை வசூலிக்கின்ற நேரத்தில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அவற்றை நான் தெரிவித்துக்கொள்ள, ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இன்றைய வியாபாரம் மிகவும் பெருகிக் கொண்டு வருகிறது. இதன் காரணமாக ரயிலில் சரக்குகளை அதிகமாக அனுப்ப முடியாமல் இருப்பதன் காரணமாக, லாரிகள் மூலமாக சரக்குகள் அனுப்பப்படுகின்றன. இவ்விதம் லாரிகளில் சரக்குகளை அனுப்பும்போது, அவற்றை செக் செய்வதற்காக இடையில் செக் போஸ்ட்-களை ஏற்படுத்தியிருக்கிறோம். சரியான முறையிலே வரி செலுத்தப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்காக, டெலிவரி நோட், இன்வாய்ஸ் காப்பி போன்றவைகள் லாரியில் இருக்கவேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் வகுத்திருக்கிறது. நடுராத்திரியில் சில செக் போஸ்டுகளில் செக் செய்யும் போது, டெலிவரி நோட் இல்லை, அல்லது இன்வாய்ஸ் நகல் இல்லை என்ற காரணத்திற்காக அந்த இடத்திலேயே

சரக்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இதற்காக 10 சதவிகிதம் பெனல்டி போடப்படுகிறது. இதன் காரணமாக பல சங்கடங்கள் உருவாகின்றன. நான் கூறுவது, உண்மையான பட்டியல், நகல்கள் இவைகள் எல்லாம் வைத்திருப்பவர்களுக்குக்கூட, ஒரு ரசீதில் ரெஜிஸ்டர் நம்பர் இல்லை என்ற காரணத்திற்காகக்கூட 10 சதவிகிதம் பெனல்டி போடுவதும், அங்கேயே சரக்குகளை இறக்கி வைப்பதும், சரக்குகளை பறிமுதல் செய்வதும் நடக்கின்றன. இதனால் பல சங்கடங்கள் வியாபாரிகளுக்கு வந்து சேருகிறது. சாதாரணமாக சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு சரக்கு ஏற்றி அனுப்பப்படுகிறது. இதைச் சின்ன சேலத்தில் பரிசோதிப்பார்கள் என்று வைத்துக்கொண்டால், அங்கு ஏதாவது ரெஜிஸ்டர் நம்பர் இல்லை என்று சொல்லி அங்கேயே 2,000 ரூபாய் வரை பெனல்டியும் போட்டுவிடுகிறார்கள். லாரிக்காரர்கள் இந்த பெனல்டியை கொடுக்க முடியாத காரணத்தால் சரக்கை அந்த இடத்திலேயே இறக்கி வைக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பின்னால் கோயம்புத்தூருக்குச் சென்றாலும் கூட—இந்த நம்பர் தெரிவது வரையிலும் சரக்குகள் கொடுக்காமல் நிறுத்திவைக்கப்படும். கோயம்புத்தூர் வியாபாரி இந்த டாக்குமெண்டுகளை எல்லாம் சின்னச் சேலத்திற்கு கொண்டு வந்து—அதாவது பட்டியல், நகல்கள், சி-பார்ம் முதலியவைகளை எல்லாம் காண்பித்தாலும்கூட, பெனல்டி போட்டது போட்டதுதான். இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றால் அப்பீல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அப்பீல் செய்து கொள்வது என்றால் எந்த மாவட்டத்தின் எல்லைக்குள் சரக்குகள் பறிமுதல் செய்யப்பட்டனவோ எந்த இடத்தில் அபராதம் விதிக்கப்பட்டதோ அந்த மாவட்டத்திலுள்ள அதிகாரியிடத்தில்தான் அப்பீல் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. அப்பீல் எடுத்துக் கொள்வதற்கு 2 மாதங்கள் ஆகும். அதன் மீது அப்பீல் முடிவு தெரிவதற்கு இன்னும் காலதாமதம் ஆகும். இதன் மீது ஆர்டர் போட்ட பிறகும்கூட, செக் போஸ்டில் போய்தான் சரக்குகளை பெற்றுக் கொள்ளவேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேலாக சரியான பாதுகாப்பு இல்லாமல் சரக்குகள் கெட்டுப்போகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாக பல சங்கடங்களும், சிக்கல்களும் வியாபாரிகளுக்கு ஏற்படுகிறது. அதோடு, சரக்கும் வீணாகக் கெட்டுப் போய்விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போதுள்ள முறையில், சென்னையிலுள்ள வியாபாரிகளுக்கு சில சலுகைகள் இருக்கின்றன. சென்னையிலிருந்து சரக்குகள் அனுப்புவதாக இருந்தாலும் சரி, சென்னையில் பெறுவதாக இருந்தாலும் சரி, இதைப்பற்றி பார்த்துக்கொள்வதற்கு தனியாக இலாகா ஏற்படுத்தி, இதில் கொடுக்கப்பட வேண்டிய பத்திரங்கள், நகல்கள் இவைகளை கொடுத்து, ரிலீஸ் வாங்கி கொடுத்துவிடுகிறார்கள். இதே சலுகைகள் கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் இருக்கின்ற வியாபாரிகளுக்கும் கிடைக்கவேண்டும். இப்போதுள்ள முறையில் சென்னையில் இல்லாத மற்ற இடங்களிலுள்ள வியாபாரி

கள் பறிமுதல் செய்யப்பட்ட இடத்திற்கு போகக்கூடிய கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இதை நாம் மாற்றியாக வேண்டும். சோதனை போடவேண்டாம் என்றுகூட சொல்லவில்லை. ஆனால், சென்னையிலிருக்கின்ற வியாபாரிகளுக்கு கிடைக்கக்கூடிய சலுகை சேலத்தில் இருக்கின்ற வியாபாரிகளுக்கும், கோயம்புத்தூரில் இருக்கின்ற வியாபாரிகளுக்கும் கொடுக்கப்படுவதற்கு வழிவகை செய்தால் போதும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். லாரிகளில் போகின்ற சரக்குகளுக்கு விற்பனை வரி செலுத்தப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி சந்தேகம் இருக்குமானால் நிச்சயமாக அதைப்பற்றி பரிசோதனை போடுவதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், பறிமுதல் செய்த பின்னால், அதை ரிலீஸ் செய்வதற்கு வேண்டிய பத்திரங்கள், நகல்கள், முதலியவைகளை எல்லாம் கொடுத்த பின்னாலும், சீக்கிரமாக, எளிதாக ரிலீஸ் பண்ணுவதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக, ரெஜிஸ்டிரேஷன் நம்பர் இல்லை என்ற காரணத்திற்காக ரூ. 2,000 ரூ. 5,000 என்று பெனல்டி விதிக்கப்படுகிறது. ஆனால், பெரிய கம்பெனிகளாக இருக்கின்ற, டாட்டா, பிர்லா, ஓரியன்ட் போன்ற மில்களிலிருந்து ஒரு டெலிவரி நோட்தான் கொடுக்கிறார்கள். ஆனால், இந்த சரக்குகள் இரண்டு, மூன்று லாரிகளில் அனுப்பப்படுகின்றன. இந்த டெலிவரி நோட் முதல் லாரியில் இல்லை, இரண்டாவது லாரியில் இருந்தது. ஆகவே இரண்டாவது லாரியை விட்டுவிட்டோம், முதல் லாரியை பிடித்தோம், என்ற சூழ்நிலை எல்லாம் இல்லாமல் எளிதான முறையில் வியாபாரிகளுக்கு சரக்குகளை கொண்டு செல்வதற்கும், அதே நேரத்தில் வரியை சரியாக கொடுப்பவர்களுக்கு சலுகைகளை கொடுப்பதற்கும் வழிவகை செய்யவேண்டும். இல்லையென்றால், வியாபாரிகள் தங்கள் வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு இரண்டு மாதம், மூன்று மாதம் ஆடிட்டர்களையும், வக்கீல்களையும் அழைத்துக்கொண்டு அலையவேண்டியிருக்கிறது. இவர்களுக்கு நாம் சென்னையிலுள்ள வியாபாரிகளுக்கு இருக்கின்ற சலுகைகளை செய்து கொடுத்தால் இந்த அலைச்சல் மீதமாகும். அதே நேரத்தில் சரக்குகளையும் கெடாமல் பாதுகாக்க முடியும். அதிலும் இது போன்ற நெருக்கடி காலத்தில் பறிமுதல் செய்யப்படுகின்ற பொருட்கள் சேதமடைவதால் வியாபாரிகளுக்கு மட்டும் நஷ்டம் அல்ல, நாட்டுக்கும் நஷ்டம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில், விற்பனை வரியை வியாபாரிகள் செலுத்துவதற்கு தயாராக இருக்கிறார்கள். அதிகமாக விகிதம் இருந்தாலும் கூட, அதையும் கொடுக்க விருப்பத்தோடு தான் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லுவதெல்லாம், இதில் இருக்கின்ற கஷ்டங்களையும் சிக்கல்களையும் மிகவும் எளிதான முறையில் மாற்றி அமைப்பதின் மூலமாக வியாபாரத்தையும் நாட்டின் வளர்ச்சியையும் பெருக்க முடியும் என்பது தான். இதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, விற்பனை வரி உயர்வு பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் இதிலே இருக்கிற பல சிக்கல்களையெல்லாம், இன்றைய தினம் எப்படி அரசாங்கம் மனமுவந்து வியாபாரிகள் கோரிக்கைகள் மீது நம்பிக்கை வைத்து, அவர்கள் சொல்லில் நம்பிக்கை வைத்து பல திட்டங்களை நிறைவேற்றத் தயாராக இருக்கிறார்களோ, அதே மாதிரி இந்தச் சிக்கல்களையும் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி உயர்வு கோருவது அவசியம் இல்லாத ஒன்று என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இரண்டு சதவீதம் என்று இருப்பதை ½ சதவீதம் தானே உயர்த்துகிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். ஆனால், இது வாங்குகிறவர்கள் கொடுக்கக் கூடிய வரியே தவிர, விற்பவர்கள் கொடுக்கும் வரி அல்ல. வாங்குகிறவர்கள் எல்லாம் மொத்தமாக 100 ரூபாய், 50 ரூபாய் என்ற கணக்கில் வாங்குவதில்லை. பெரும்பாலான மக்கள் 1 ரூபாய், 1½ ரூபாய் என்ற அளவுக்குத் தான் வாங்குகிறவர்கள். அப்படி வாங்குகிறவர்களெல்லாம் கொடுப்பது 3 பைஸாவாக இருக்குமே தவிர 2½ பைஸாவாக இருக்க முடியாது. பெரும்பாலும் சில்லறையில் வாங்குகிறவர்கள் கொடுக்கக் கூடியது மொத்தத்தில் 3 பைஸாவுக்குக் குறையாமல் இருக்கும். அரை பைஸா என்று போடுவது வரி உயர்வு மொத்தத்தில் குறைவாகக் காட்டுவதற்கே தவிர, இது 3 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று கூறுவது தான் பொருத்தமாக இருக்கும். இம்மாதிரி வரியை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறதா? சாதாரணமாக 34 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இந்த ஆண்டு, இந்த விற்பனை வரி என்று கூறப்படும் வரி இனத்தின்கீழ் அரசாங்கத்திற்கு வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மசோதாவும் அமுலுக்கு வருமானால் இது வெகுவாக அதிகரிக்கும். அது காலக்கிரமத்திலே இன்னும் அதிகமாகத்தான் இந்த வரியால் பளு ஏற்படும். விலைவாசியைக் குறைத்து நியாயமான விலைவாசிக் கொள்கை இருக்கவேண்டும் என்று கூறக் கூடிய சமயத்தில் இம்மாதிரி வரி உயர்வானது, விலைவாசியை உயர்த்திக் கொண்டு போகக் கூடியதாகத் தான் இருக்கிறது. இதனால் விலைவாசி உயராது என்று எந்த அமைச்சரும் உத்திரவாதம் கொடுப்பதாகக் காணோம். ஏற்கனவேயே, வர்த்தக சமூகத்தினர், கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிக்கை மீது கருத்துத் தெரிவிக்கும் போது, உத்தேசிக்கப்பட்ட வரிகள் மூலம் விலைவாசி உயரும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள், அதாவது பயமுறுத்தியிருக்கிறார்கள். விலையை உயர்த்தப் போகிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள் என்று தான் அதற்கு அர்த்தம். அவர்களுக்குச் சாதகமாக இந்த வரியை ஏற்படுத்திக் கொடுப்பானேன் என்று கேட்கிறேன். இந்த வரியை உயர்த்தாமல் வேண்டிய நிதி வசதியைப் பெறுவதற்கு வேறு வழியே இல்லையா? தற்போதைய நிலையையொட்டித் தாற்காலிகமாக இந்த வரி உயர்வைக் கொண்டு

வந்தாலும் ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன். இதற்கு முன் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். வரி ஏய்ப்புகளைக் கண்டு பிடிக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அதை விட்டு விட்டார்கள். அந்த மசோதாவைக் கருணையோடு கைவிட்டு விட்டு ½ சதவீதம் வரியை பொது மக்கள் மீது சுமத்துவது என்ன நியாயம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. விற்பனை வரி தோன்றிய காலத்திலிருந்து 10 ஆண்டு காலமாக வரி ஏமாற்றப்படுகிறது. வரி வசூலிப்பதில் உள்ள குறைகளை அறிந்து ஏமாற்றுவதைத் தடுத்து வரியை வசூலிக்க நடவடிக்கை எடுத்தாலே, இந்த மசோதா மூலமாக என்ன எதிர்பார்க்கிறார்களோ அதையும் மிஞ்சி விடக் கூடிய அளவுக்கு வருமானம் வரும். அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதில், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து எல்லா மக்கள் மீதும் வரியைச் சுமத்துவது நியாயம் அல்ல. இது நெருக்கடியைச் சமாளிக்கும் முறையா அல்லது வேறு நெருக்கடியை ஏற்படுத்தும் முறையா என்று அறிய விரும்புகிறேன். இந்த மாதிரி இந்தச் சட்ட சபையிலே வந்திருக்கக் கூடிய சில மசோதாக்களை நிறைவேற்றியிருக்கிறார்களே அதெல்லாம் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கை அல்ல. அதற்கு பதில் பாதுகாப்புக்கு ஊனம் விளைவிக்கவேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள் பொது மக்களிடத்திலே பிரசாரம் செய்ய உபயோகமாக இருக்குமே தவிர, நிதி வசதியைப் பெருக்கிக்கொள்ளுவதற்கு உபயோகமாக இருக்காது. குறுகிய நோக்கத்தோடு அரசாங்கம் ஏன் இப்படிக் கொண்டுவரவேண்டும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு நிலையாக பண வசதி செய்துகொள்ளும் நோக்கம் இருக்கிறது. நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ளுவதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. யார் மீது சுமை விழுந்தால் தாங்குமோ அங்கு போட வேண்டும். இந்த விற்பனை வரி வசூலிப்பதைக் கடுமையாக்கி, வரி ஏய்ப்புகளைத் தடுத்து முழுதும் வசூலிக்க நடவடிக்கை எடுத்தாலே போதும். வரியை உயர்த்துவதற்கு எந்த வித அவசியமும் கிடையாது. வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்காக வந்த மசோதாவையும் கைவிட்டு விட்டு, கைவிடவேண்டுமென்று சொன்னவர்களெல்லாம் இந்த மசோதாவைக் கூட ஆட்சேபிக்க உரிமை இல்லை என்பது என் அபிப்பிராயம். ஏன் அந்த மசோதாவைக் கைவிட்டார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்ன வாக்குறுதி வந்தது? எத்தனை முறை வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது? எந்த அளவுக்கு அவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன? அந்த மசோதாவைக் கைவிட்டு விட்டு இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. அக்கிரமமானது, ஆகையால் என்னால் ஆதரவு கொடுக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

10-30 a.m. * **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற விற்பனை வரி திருத்த மசோதாவை நான் மறுக்கிறேன், அல்லது எதிர்க்கிறேன்.

இந்த மாதிரி எல்லாத் துறையிலேயும் வரிகளைப் போட்டுக் கொண்டே போவது ஏதோ சிலர் எண்ணுவது போலப் பணக்காரர்களை அல்லது வணிகர்களை நேரடியாக பாதிப்பதே இல்லை. முழுக்க முழுக்க எல்லா வரிகளைப் போடுவதிலேயும் சில தொழில் துறையிலே இருக்கிறவர்களுக்கு லாபம் வேறு அதிகரிக்கிறது. இது பொருளாதார ரீதியில் கணக்கிடுகிறவர்களுக்கு நன்றாகப் புரியும். ஆதலினாலே தான் இதை நான் எதிர்க்க முன் வருகிறேன். இந்த விற்பனை வரி தோன்றிய காலத்திலிருந்து இதைக் கவனத்தில் கொண்டு பார்ப்போமானால், ½ சதவீதத்திலிருந்து இன்று சட்ட ரீதியாக அல்லது திருத்த ரீதியாக 11 சதவீதம் வரையில், ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு, 11 சதவீதம் வரையில் கூடியிருப்பதை நாம் காண முடியும். இது புள்ளிக் கணக்கு. பெறுபவன் கணக்கைப் போய்ப் பார்த்தால் எப்படி வரும் என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். 100 ரூபாய் பண்டம் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு டாக்ஸ் முதன் முதலாக 2½ ரூபாய். பொருளின் விலை 102½ ரூபாய் ஆகிறது. அதை வாங்கி விற்கிற வணிகன் ரொம்ப நியாயமாக, தர்ம ரீதியில் நடப்பவனாக இருந்தால் 110 ரூபாய்க்கு விற்பான், தன்னுடைய லாபத்தையும் சேர்த்து. கொள்ளை லாபம் சம்பாதிக்க வேண்டும் என்று பேராசை கொண்டவர்களை நான் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆறு சதவிதம் அல்லது 8 சதவீதம் கிடைத்தால் போதும் என்று தர்ம ரீதியான வாணிகத்தை வைத்துக்கொண்டு பார்க்கிறேன். நூற்றுப் பத்து ரூபாய் வரும்போது அடுத்தவனுக்கு அவன் விற்கிறான். அதற்கு 2-3/4 ரூபாய் வரி. வாங்குகிறவன் தனக்கு லாபம் வேண்டும் என்று சொல்லி சுமார் 7½ ரூபாய் லாபம் வைத்துக்கொண்டு விற்கிறான் என்று சொன்னால் 120 ரூபாய்க்கு அவன் விற்கிறான். அதற்கு வரி 3 ரூபாய். வரியையும் சேர்த்து 123 ரூபாய் வாங்கியவனுக்கு அசல் கொள்முதல் விலை ஆகிறது. அவன் அதற்கு லாபம் வைத்துக்கொண்டு விற்கத் தொடங்குகிறான் என்று பார்த்தால் அவன் விற்பது 130 ரூபாய்க்கு. 130 ரூபாய்க்கு வரி 3¼ ரூபாய். 133¼ ரூபாய் ஆகிறது 4-வது கையிலே. அடுத்த கையில் தான் சாதாரண மக்களுக்கு தாங்கள் துய்ப்பதற்கு, ரியல் கன்ஸ்யூமர்ஸுக்குக் கிடைக்கிறது. அவன் அதற்கு 140 ரூபாய்க்கு மேலே விலை வைத்து வரியாக 3½ ரூபாய் உட்பட 143½ ரூபாய்க்கு விற்கிறான்.

ஆகவே ரூ. 100 பண்டம் வாங்குபவர்கள் கைமாறிய காரணமாக ரூ. 143½ ஆகிறது. இதை ஒரு புறத்தில் வைத்துவிட்டு, அரசாங்கத்திற்கு இந்த 'டர்ன்ஓவர் டாக்ஸ்' பலமுனை விற்பனை வரி என்று போடுவதன் மூலமாக, 2½ என்பது சரியான கணக்குப்படி உண்மை அல்ல, மொத்தமாக இதைக் கூட்டிப் பார்த்தால், தங்களுக்குக் கொடுப்பதற்கு என்ன வரவேண்டுமோ, அதைவிட மிக அதிகமாக வருகிற நிலையை நாம் காண்போம். ரூ. 12½ வரவேண்டிய இடத்திலே ரூ. 15 வரியாக வந்திருக்கிறது. ஆகவே, 2½ சதவிகிதம் என்பது வட்டிக்கு வட்டி, 'காம்பவுண்டு இண்டரஸ்டு' என்று போடுவதுபோல, அந்தக் கணக்குப்படி வரிக்கு வரி என்று 10-30 a.m.

[திரு. சா. கணேசன்] [12th November 1965

ஏறிக்கொண்டே போகிறது. வரிக்கு வரி மட்டுமல்ல, வாங்கி விற்பவர்களின் லாபத்தையும் சேர்த்து, அந்தத் தொகைக்கும் நாம் வரி கொடுக்கவேண்டிய நிலையைப் பார்க்கும்பொழுது, இது துய்ப்பவர்களுக்கு அதிகமான பளுவை அல்லது விலைவாசி உச்ச விலைக்குச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது என்பதை நாம் மறந்துவிடப்படாது. இந்த நிலையிலே, ஏற்கனவே இந்த ஸேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக நிர்ப்பந்தம் ஏற்படும் என்று கருதி, வணிகர்களெல்லாம் வந்து உறுதிமொழி கொடுத்து, அதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு, கொண்டுவர இருந்த மசோதாவை அரசாங்கம் கைவிட்டிருக்கிறது. அது சரியா, தவறு என்று அதற்கெல்லாம் நான் இப்பொழுது போவதற்கில்லை. சரியென்று சொல்லுவார்களும் உண்டு. தவறு என்று சொல்லுவார்களும் உண்டு. அதைப்பற்றி இப்பொழுது நமக்குப் பேச்சு இல்லை. அந்த நிலையிலே, இப்பொழுது இதன் மூலம் சுமார் ரூ. 3 கோடிக்கு மேல் ரூ. 4 கோடிக்கு வருமானம் கூடி வரும் என்று அரசாங்கம் கணக்கிட்டிருக்கிறது. ஒழுங்கான ரீதியிலே உள்ள வரியை எந்த விதமான மறைப்பும் இல்லாமல் கொடுக்கிற அல்லது வசூலிக்கிற நிலையோ அல்லது திறமையோ வந்துவிட்டால் இந்த ரூ. 3 கோடி அல்லது 4 கோடியைவிட பல கோடிக்கு, சுமார் ரூ. 20 கோடிக்கு மேலே ஒழுங்கான ரீதியிலே, உள்ள வரி விகிதத்தில் வரவேண்டிய வரித் தொகை கிட்ட முடியும், பெற முடியும், எட்ட முடியும் என்பது நமக்குத் தெளிவாக புலப்படும். அதற்கு வேண்டிய செம்மையான, திறமையான, உறுதியான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவதுதான் சாலச் சிறந்தது. அப்படி வரியை மறைப்பவர்களுக்கு, வரி ஏய்ப்பு செய்கிறவர்களுக்கு ரூ. 500 அல்லது ரூ. 1,000 அபராதம் என்ற தண்டனை மட்டும் வைத்தால் போதாது. ஏதாவது ஒரு கிருமியைக் கொல்லுவதற்கு நல்ல கொதிக்கின்ற நீராக இருந்தால் தான் அதைக் கொல்ல முடியும். வெதுவெதுப்பான நீராக இருந்தால் அந்தக் கிருமி மேற்கொண்டு பெருகவே செய்யும். ஆகவே, தண்டனை குறைவாக இருந்தால், அந்த தண்டனைக்கும் சேர்த்து நாம் பல மடங்காக சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற ஒரு துணிச்சல் வரி ஏய்ப்புச் செய்கிறவனுக்கு ஏற்படுகிறது. தற்கால உலகியல்பில் தர்மம், நியாயம் ஆகியவற்றிற்குக்கட்டுப்பட்டே மனிதன் நடக்கிறான் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே, வரி ஏய்ப்புச் செய்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை, அதாவது கிட்டத்தட்ட அவர்களுடைய மொத்த வாணிப அளவிலே பாதி என்ற அளவுக்கு தண்டனை போட வேண்டும். அப்படிப் போட்டால் தான், கடுமையான தண்டனை போட்டால் தான், வரி ஏய்ப்பு போன்ற தேசிய விரோதமான, மனிதாபிமானத்திற்கு முற்றிலும் துரோகமான, கீழ்த்தரமான நிலைகள் நாட்டில் தோன்ற மாட்டா. அதை அழுத்தமாக அமல் நடத்துவதை விட்டுவிட்டு, வரவேண்டிய வரியை வசூலிக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதை விட்டுவிட்டு, வருகிற வரி வருமானத்தொகை அளவு போதவில்லை என்று அவ்வப்பொழுது வரியைக் கூட்டிக்கொண்டே போவது என்றால், கூடுகிற வருமா

12th November 1965] [திரு. சா. கணேசன்]

னத்தை அவர்கள் கொள்ளையடிக்கத் தொடங்குவார்கள். ஆகவே, கொள்ளை அடிப்பவர்களுக்கு மேலும் மேலும் வாய்ப்புக் கொடுக்கிற ஒரு நிலையாக நம்முடைய வரி விகித முறை அமைந்து விடப்படாது அல்லது வரிவிகித உயர்வு முறை அமைந்துவிடப்படாது. இதைத்தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதற்கும் மேலே ஒன்றை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி அனுபந்தத்திலிருந்து, நான்காவது தொடர்பு எண், அதாவது ஸீரியல் எண் இருக்கிறதே அதில் 'Refrigerators, air-conditioning plants, component parts of refrigerators or air-conditioning plants' என்று கண்டிருக்கிறது. இதற்குள்ளே 'ஹீட்டர்' வருகிறதா, வாட்டர் கூலர் வருகிறதா. இதுமாதிரி இனங்கள் பல எங்கும் காணப்படவில்லை. இவைகளெல்லாம் இதற்குள்ளே வராதா? இவைகளெல்லாம் எலக்ட்ரிக் குட்ஸ்-க்குள்ளே வருகிறதா? அதுவும் தெளிவாக்கப்படவில்லை. அப்படியானால் "ரெப்ரிஜிரேட்டர், ரேடியோ போன்றவைகளெல்லாம்" என்று குறிப்பிட்டிருக்கலாமே. இது மாதிரியான பண்டங்கள் அல்லது அது சம்பந்தமான பாகங்கள் என்ற நிலையையும் காணோம். இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இதை வரவேற்கிற முறையில் சொல்லவில்லை—இது அமைகிற முறையிலே, இதிலே சிறிய சிறிய சந்து பொந்துகள் ஏற்பட்டு, அதற்குள்ளே வணிகர்கள் நுழைந்து முறைகேடு ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

அதேமாதிரி 35-வது தொடர் எண்ணை ஒட்டியதாக இருக்கிறதே, அதாவது கெரஸின்—குறைந்த பட்சம் கடைசி முடிவுக்கு வருகிறேன்—கெரஸினுக்கு வரியை கூட்டாமல் இருக்கவேண்டும். கெரஸின் கிட்டத்தட்ட பெரும்பாலாக ஏழைகள் அனுபவிக்கின்ற, பயன்படுத்துகின்ற ஒரு மூலப் பண்டம். சில பெரிய பணக்காரர்களுக்கு கெரஸின் சில இனங்களுக்குத்தான் தேவையாக இருக்கலாம். எல்லாவற்றிற்கும், விளக்கு முதல் ஒன்று பாக்கியில்லாமல் எல்லாவற்றிற்கும் குடிசை வாழ்பவர்கள், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள், அவர்களுக்கெல்லாம் பிற வசதிகளெல்லாம் கிடையாது, ஆதலினாலே மண்ணெண்ணெய் ஒன்றையே நம்பி வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்த மாதிரி மிகத் தாழ்மையான, அடிமட்ட நிலையிலே வாழ்கின்ற மக்களை பெரிதும் பாதிக்கக்கூடியது இது. கெரஸினுக்கு ½ சதவிகிதம் தான் வரி ஏறுகிறது என்று கணக்குச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் அதை ரொம்ப அழகாகச் சொன்னார்கள் என்று திரு. மதியழகன் குறிப்பிட்டார்கள். ரூபாய்க்கு அரைக்காசுதான் வரி கூட்டிப் போட்டிருக்கிறோம் என்று சொல்லுவதைக் கேட்கும்பொழுது அல்பமாகத் தோன்றலாம். அது வந்து தாக்குகின்ற பொழுது தான் அது பிரமாதமாகத் தோன்றும் பலருக்கு; சிலருக்கு அல்ல, குறிப்பிட்டவர்களுக்கு. வாழ்க்கை நிலையிலே கீழ் மட்டத்தில் இருப்பவர்களை அது மிக மிகப் பாதிக்கும், ஆகவே

[திரு. சா. கணேசன்] [12th November 1965

ஏறிக்கொண்டே போகிறது. வரிக்கு வரி மட்டுமல்ல, வாங்கி விற்பவர்களின் லாபத்தையும் சேர்த்து, அந்தத் தொகைக்கும் நாம் வரி கொடுக்கவேண்டிய நிலையைப் பார்க்கும்பொழுது, இது துய்ப்பவர்களுக்கு அதிகமான பளுவை அல்லது விலைவாசி உச்ச விலைக்குச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது என்பதை நாம் மறந்துவிடப்படாது. இந்த நிலையிலே, ஏற்கனவே இந்த ஸேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக நிர்ப்பந்தம் ஏற்படும் என்று கருதி, வணிகர்களெல்லாம் வந்து உறுதிமொழி கொடுத்து, அதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு, கொண்டுவர இருந்த மசோதாவை அரசாங்கம் கைவிட்டிருக்கிறது. அது சரியா, தவறா என்று அதற்கெல்லாம் நான் இப்பொழுது போவதற்கில்லை. சரியென்று சொல்லுவார்களும் உண்டு. தவறு என்று சொல்லுவார்களும் உண்டு. அதைப்பற்றி இப்பொழுது நமக்குப் பேச்சு இல்லை. அந்த நிலையிலே, இப்பொழுது இதன் மூலம் சுமார் ரூ. 3 கோடிக்கு மேல் ரூ. 4 கோடிக்கு வருமானம் கூடி வரும் என்று அரசாங்கம் கணக்கிட்டிருக்கிறது. ஒழுங்கான ரீதியிலே உள்ள வரியை எந்த விதமான மறைப்பும் இல்லாமல் கொடுக்கிற அல்லது வசூலிக்கிற நிலையோ அல்லது திறமையோ வந்துவிட்டால் இந்த ரூ. 3 கோடி அல்லது 4 கோடியைவிட பல கோடிக்கு, சுமார் ரூ. 20 கோடிக்கு மேலே ஒழுங்கான ரீதியிலே, உள்ள வரி விகிதத்தில் வரவேண்டிய வரித் தொகை கிட்ட முடியும், பெற முடியும், எட்ட முடியும் என்பது நமக்குத் தெளிவாக புலப்படும். அதற்கு வேண்டிய செம்மையான, திறமையான, உறுதியான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவதுதான் சாலச் சிறந்தது. அப்படி வரியை மறைப்பவர்களுக்கு, வரி ஏய்ப்பு செய்கிறவர்களுக்கு ரூ. 500 அல்லது ரூ. 1,000 அபராதம் என்ற தண்டனை மட்டும் வைத்தால் போதாது. ஏதாவது ஒரு கிருமியைக் கொல்லுவதற்கு நல்ல கொதிக்கின்ற நீராக இருந்தால் தான் அதைக் கொல்ல முடியும். வெதுவெதுப்பான நீராக இருந்தால் அந்தக் கிருமி மேற்கொண்டு பெருகவே செய்யும். ஆகவே, தண்டனை குறைவாக இருந்தால், அந்த தண்டனைக்கும் சேர்த்து நாம் பல மடங்காக சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற ஒரு துணிச்சல் வரி ஏய்ப்புச் செய்கிறவனுக்கு ஏற்படுகிறது. தற்கால உலகியல்பில் தர்மம், நியாயம் ஆகியவற்றிற்குக்கட்டுப்பட்டே மனிதன் நடக்கிறான் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே, வரி ஏய்ப்புச் செய்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை, அதாவது கிட்டத்தட்ட அவர்களுடைய மொத்த வாணிப அளவிலே பாதி என்ற அளவுக்கு தண்டனை போட வேண்டும். அப்படிப் போட்டால் தான், கடுமையான தண்டனை போட்டால் தான், வரி ஏய்ப்பு போன்ற தேசிய விரோதமான, மனிதாபிமானத்திற்கு முற்றிலும் துரோகமான, கீழ்த்தரமான நிலைகள் நாட்டில் தோன்ற மாட்டா. அதை அழுத்தமாக அமல் நடத்துவதை விட்டுவிட்டு, வரவேண்டிய வரியை வசூலிக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதை விட்டுவிட்டு, வருகிற வரி வருமானத்தொகை அளவு போதவில்லை என்று அவ்வப்பொழுது வரியைக் கூட்டிக்கொண்டே போவது என்றால், கூடுகிற வருமா-

12th November 1965] [திரு. சா. கணேசன்]

னத்தை அவர்கள் கொள்ளையடிக்கத் தொடங்குவார்கள். ஆகவே, கொள்ளை அடிப்பவர்களுக்கு மேலும் மேலும் வாய்ப்புக் கொடுக்கிற ஒரு நிலையாக நம்முடைய வரி விகித முறை அமைந்து விடப்படாது அல்லது வரிவிகித உயர்வு முறை அமைந்துவிடப்படாது. இதைத்தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதற்கும் மேலே ஒன்றை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி அனுபந்தத்திலிருந்து, நான்காவது தொடர்பு எண், அதாவது ஸீரியல் எண் இருக்கிறதே அதில் 'Refrigerators, air-conditioning plants, component parts of refrigerators or air-conditioning plants' என்று கண்டிருக்கிறது. இதற்குள்ளே 'ஹீட்டர்' வருகிறதா, வாட்டர் கூலர் வருகிறதா. இதுமாதிரி இனங்கள் பல எங்கும் காணப்படவில்லை. இவைகளெல்லாம் இதற்குள்ளே வாராதா? இவைகளெல்லாம் எலக்ட்ரிக் குட்ஸ்-க்குள்ளே வருகிறதா? அதுவும் தெளிவாக்கப்படவில்லை. அப்படியானால் "ரெப்ரிஜிரேட்டர், ரேடியோ போன்றவைகளெல்லாம்" என்று குறிப்பிட்டிருக்கலாமே. இது மாதிரியான பண்டங்கள் அல்லது அது சம்பந்தமான பாகங்கள் என்ற நிலையையும் காணோம். இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இதை வரவேற்கிற முறையில் சொல்லவில்லை—இது அமைகிற முறையிலே, இதிலே சிறிய சிறிய சந்து பொந்துகள் ஏற்பட்டு, அதற்குள்ளே வணிகர்கள் நுழைந்து முறைகேடு ஏற்பட்டுவிடாமல் தடுப்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

அதேமாதிரி 35-வது தொடர் எண்ணை ஒட்டியதாக இருக்கிறதே, அதாவது கெரஸின்—குறைந்த பட்சம் கடைசி முடிவுக்கு வருகிறேன்—கெரஸினுக்கு வரியை கூட்டாமல் இருக்கவேண்டும். கெரஸின் கிட்டத்தட்ட பெரும்பாலாக ஏழைகள் அனுபவிக்கின்ற, பயன்படுத்துகின்ற ஒரு மூலப் பண்டம். சில பெரிய பணக்காரர்களுக்கு கெரஸின் சில இனங்களுக்குத்தான் தேவையாக இருக்கலாம். எல்லாவற்றிற்கும், விளக்கு முதல் ஒன்று பாக்கியில்லாமல் எல்லாவற்றிற்கும் குடிசை வாழ்பவர்கள், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள்; அவர்களுக்கெல்லாம் பிற வசதிகளெல்லாம் கிடையாது, ஆதலினாலே மண்ணெண்ணெய் ஒன்றையே நம்பி வாழவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்த மாதிரி மிகத் தாழ்மையான, அடிமட்ட நிலையிலே வாழ்கின்ற மக்களை பெரிதும் பாதிக்கக்கூடியது இது. கெரஸினுக்கு ½ சதவிகிதம் தான் வரி ஏறுகிறது என்று கணக்குச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் அதை ரொம்ப அழகாகச் சொன்னார்கள் என்று திரு. மதியழகன் குறிப்பிட்டார்கள். ரூபாய்க்கு அரைக்காசுதான் வரி கூட்டிப் போட்டிருக்கிறோம் என்று சொல்லுவதைக் கேட்கும்பொழுது அல்ப்பமாகத் தோன்றலாம். அது வந்து தாக்குகின்ற பொழுது நான் அது பிரமாதமாகத் தோன்றும் பலருக்கு; சிலருக்கு அல்ல, குறிப்பிட்டவர்களுக்கு. வாழ்க்கை நிலையிலே கீழ் மட்டத்தில் இருப்பவர்களை அது மிக மிகப் பாதிக்கும், ஆகவே

[திரு. சா. கணேசன்] [12th November 1965

கொளினுக்குப் போட்டிருக்கிற வரியை அடியோடு எடுத்து விடுவது சிறந்தது. இல்லையென்றால், கூட்டாமலாவது இருக்க வேண்டும்.

மொத்தத்தில் இந்த வரிகளைக் கொண்டு வராமல் இருக்கிற வரியை வசூலிக்கத் தக்க நிலையை, வசூலிக்கின்ற நெறியை, முறையை கடுமைப்படுத்தி, இந்த வரியிலிருந்து யாரும் தப்பித்து கொள்ள முடியாத ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். கண்டு பிடிக்கப்படாதவர்கள் பலர். இப்பொழுது இருக்கிற சட்ட நியதியிலே, அமைப்பிலே பார்க்கிறபொழுது அகப்பட்டுக்கொள்கிறவர்கள் மிகச் சிலர். அகப்பட்டுக்கொள்ளுபவர்களுக்காவது கடுமையான தண்டனை கொடுத்தாலொழிய, மற்றவர்களுக்கு நாம் செய்வது தீமை என்ற உணர்ச்சி ஏற்படுவதில்லை. எல்லோருமே தர்மத்திற்கும், நியாயத்திற்கும் பயப்படக்கூடிய நிலை இல்லை. சட்டம் ஒன்றுக்குத்தான் பயப்படுகிறார்கள், தண்டனைக்குத்தான் பயப்படுகிறார்கள் என்பதை உலக இயல்பை அறிந்து வாழ்கின்ற நாம் நன்கு அறிவோம். ஆகவே, இம்மாதிரி பிழை, குற்றம், தவறுகளைச் செய்பவர்களுக்கான தண்டனையை கடுமையாக்கி, வர வேண்டிய வரி முழுமையும் வசூலிக்கின்ற நெறியிலே ஆட்சி ஈடுபடவேண்டும், தலைப்படவேண்டும், அதிலும் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தி, இதை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். 'ஜெய் ஹிந்த்'.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத்தலைவர் அவர்களே ரூ. 3½ கோடி கூடுதலான வருமானத்தை எதிர்பார்த்து, இந்தப் புது விற்பனை வரி மசோதா இந்த மன்றத்தின் முன்பு கனம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு புதிய வரி போடவேண்டும் என்ற எண்ணம் வரும்பொழுதெல்லாம், தாக்குதலுக்கு ஆளாகின்ற வரி இந்த விற்பனைவரியாகத் தான் இருக்கிறது. அரசு எல்லா வரிகளிலிருந்தும் பெறுகிற வருமானத்தைப் பார்க்கும்பொழுது, இந்த வரி இனத்தின் மூலம் வருகிற வருமானம் தான் அதிகமான வருமானமாக எப்பொழுதும் இருக்கிறது. இந்த வரியின் மூலம் ஏறத்தாழ ரூ. 33 கோடி அளவுக்கு வருமானம் கிடைக்கிறது.

பொதுமக்களை மிகவாக தாக்குகின்ற வரி இனமாக இந்த வரி இனம் தான் இருக்கிறது. தாங்க முடியாத அளவுக்கு விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கின்றன என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. மக்கள் பெறுகின்ற வருமானத்திற்குள் செலவினம் அடங்கியிருக்க இல்லை என்ற ஒரு நிலைமையையும் நாம் உணர்கிறோம். எனவே, இந்த வரி தான் கேட்டபொழுதெல்லாம் தருகிற ஒரு இனமாக இருக்கிறது என்னும் கருத்துப்பட முன்னாள் அமைச்சர் ஒருவர் கூட கூறினார்கள். 'கேட்டதையெல்லாம் தருகின்ற காமதேனுவாக' இந்த வரி இனம் விளங்குகிறது என்று. அந்த முறையிலே இந்த வரி போடுகின்றபொழுது, கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் எடுத்துத் தெரிவித்தது போல, வரியின் அளவோடு மட்டும் நின்று, அந்த விலைக்கு பண்டம் விற்கப்படுகி

12th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நிலைமை இல்லை. வரி போடுகின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, லாபத்தின் நோக்கத்தோடு விலையை அதிகமாக்கி, புதிய வரி போட்டுவிட்டார்கள் என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, பண்டங்களின் விலையை ஏற்றுவதற்கு அது காரணமாக இருக்கிறது. போட்ட வரியை வசூலிக்கும் அளவுக்கு அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறதா? என்றால் இல்லை! கொள்ளை லாபம் அடிக்கிறவர்களைக் கட்டுப்படுத்துகிறார்களா? என்றால், இல்லை! பண்டங்களின் விலை ஏறாமல் தடுத்து நிறுத்தத்தக்க முறையைக் கையாளுகிறார்களா? என்றால், இல்லை! அப்படி தடுத்து நிறுத்தும் முறையை மேற்கொண்டு நடைமுறையில் வெற்றி கண்டிருக்கிறதா? என்றால், இல்லை! புது வரி போடுகிறார்கள் என்கிற சாக்கை வைத்துக்கொண்டு, அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, வரியையும் கூட்டி, லாபத்தையும் கூட்டி, பண்டங்களில் விலையை அதிகமாக ஏற்றிவிடுகிற தன்மையைப் பார்க்கிறோம்.

"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்று சொல்லுவார்கள், அதே போல, புல்லுக்கும் பொசியும் என்று நெல்லுக்கு இறைப்பது போல, நெருக்கடி நிழலிலே வரிவிதித்து நிதி சேர்க்க, இந்த நான்கு வரிகளும் வந்திருக்கின்றன. விதித்திருக்கும் வரியும் நெருக்கடி நிலையைச் சமாளிக்க மட்டும் அல்ல. வேறு சில இனங்களையும் ஈடு கட்ட என்றும் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரி போடுவதன் மூலம் பண்டங்களின் விலை ஏறுகிறது என்று அமைச்சரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; அதனால் கஷ்டங்கள் ஏற்படும், நெருக்கடி நிலைமையை ஒட்டி அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் கனம் அமைச்சர் தெரிவித்தார்கள். இந்த வரி இனத்தில் உணவுப் பண்டங்கள் தப்பித்துக் கொண்டிருப்பது ஆறுதல் அளிக்கும் ஒன்று. உணவுப் பண்டங்கள்மீது விற்பனை வரி போடக்கூடாது என்கிற கருத்து பல ஆண்டுகளாகவே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. உணவுப் பொருள்மீது வரி போடக்கூடாது என்று பரவலாக பலராலும் அவ்வப்பொழுது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. புதிதாக இப்பொழுது ஆடம்பர பண்டங்களுக்கு மட்டும் விற்பனை வரி விதிப்பதன் மூலமாக வருமானத்தை அரசு எதிர்பார்க்கிறது என்றாலும் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், எல்லா பண்டங்களுக்கும் வரி உயர்வு ஏற்படுவதன் மூலம், பல முனைகளில் வரிகள் ஏற்படுவதன் மூலம், பலகைகள் மாறி வருகிறபோது, பண்டங்களின் வரி உயர்வோடு, லாபத்தையும் உயர்த்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கிறது. ஆகவேதான் பொது மக்கள் தாங்க முடியாத நிலை ஏற்படும் என்கிற ஐயப்பாடு ஏற்படுகிறது. விலைவாசிகள் உயர்வினால் பொதுவாக நாட்டிலே தத்தளிக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டிய நிலையில் இந்த வரிகள் வருகின்றன.

இந்த வரிகள் மூலமாக பெறக்கூடிய வருமானம் 3½ கோடி ரூபாய்தான் என்றாலும். பொதுவாக 6 அல்லது 7 கோடி ரூபாய் வரைக்கும் வரும் என்கின்ற நிலைமை இருக்குமானால், அந்த வருமானத்தை 3½ கோடியோடு நிறுத்திக்கொள்ளும் அளவுக்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th November 1965

செய்யலாமா என்பதையும் பார்க்கவேண்டும். அது மட்டுமல்ல, வரி ஏய்ப்பு மூலம் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் வசூலிக்கப் படாமல் இருக்கிறது என்று பரவலாக பலராலும் எடுத்துச் சொல்லப்படுகிறது. வரி ஏய்ப்பைத் தடுத்து நிறுத்த, அதை வசூலிக்க முயற்சிகள் எடுக்கப் படவேண்டும் என்கிற நோக்கத் தோடு ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. நியாயமான முறை களில் நடந்து கொள்ளுகிறோம், தொல்லைகளுக்கு ஆளாகாத வண்ணம் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிறோம், நாணய மாக நடந்துக்கொள்கிறோம் என்று உறுதிமொழி கொடுத்ததன் அடிப்படையில், அந்த மசோதா வாபஸ் பெற்று, நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. தேவையானால், மீண்டும் கொண்டுவரப்படும் என்கிற உறுதிமொழியையும் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள்.

மற்றைய வரி ஏய்ப்பைவிட, விற்பனை வரி ஏய்ப்பு அதிகமாக இருப்பதால், அதில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் ஏய்ப்பு ஏற்படாத வகையில் வரியை வசூலித்தாலே, இந்த 3½ கோடி கிடைத்துவிடும், வரிபோடவேண்டிய அவசியமே இருக் காது என்கிற கருத்தும் தெளிவுபட எடுத்துச் சொல்லப்பட்டது. அதிலே தீவிர கவனம் செலுத்தி, தேவைப்படும் நிதியை பெற முடியும். ஏற்கனவே போட்டிருக்கிற வரியின் மூலம் உள்ள படியே வசூலிக்க வேண்டிய தொகை மிக அதிகமாக, கோடிக் கணக்கில் இருப்பதால், அதில் தீவிரக் கவனம் செலுத்தி நட வடிக்கை எடுக்கப்படவேண்டும். அந்த நோக்கத்தின் அடிப் படையில், பண்டங்களின் விலைகள் ஏறாமல், பாதுகாப்புக் கொடுக் கும் அளவுக்கு வழிவகை செய்யவேண்டும். ஆடம்பரப் பொருள்களுக்கு வரி விதிப்பதில் அதிகத் தொல்லை இருக்க முடியாது. ஆனால், எல்லாப் பண்டங்களுக்கும் என்று போட்டு இருப்பதால், விலைவாசி ஏறுமோ என்கிற அச்சம் ஏற்பட்டிருக் கிறது. அதைத் தடுத்து நிறுத்தி, ஏறினால் வரிமட்டுந்தான் ஏறும், மற்றவகையில் விலைகள் ஏறாது என்கிற உத்தரவாதம் கொடுக்கமுடியாத நிலையில் அரசு இருக்கிறது.

வரி போடும்போது பண்டங்களின் விலைவாசிகள் ஏறாமல் பாது காப்பு அளிக்கவேண்டும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த முறையில் விலைவாசிகளை ஏற்ற வாய்ப்பு அளிக்காமல் செயல் படவேண்டும். பொதுவாக வரியை அரை சத விகிதம் உயர்த்துவதன் மூலம் விலையை ஒரு சதவிகிதம் உயர்த்து வார்கள். இப்படிப்பட்ட நெருக்கடி நிலைமைக்கு ஆளாகாமல், சட்டங்களை சரியான முறையில் அமல் நடத்தி, வரி வசூல் செய் வதைத் தீவிரப்படுத்துவதன் மூலம் வேண்டிய தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நோக்கத்தை அமைச்சரவைக்கு திரும்பத் திருப்ப எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகையினால், இந்த வரியின் மூலம், உணவுப் பண்டங்களுக்கு வரியே இல்லாத அளவுக்கு விதிக்க வேண்டும் என்கிற அடிப்படைக் கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கிற

12th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நெருக்கடி காரணமாக, வேறு பல பண்டங்கள் வாங்கமுடியாத நிலை யோடு, அடிப்படை உயிர் வாழ்விற்குத் தேவைப்படும் உணவுப் பண்டங்களின் விலைகள் ஏறாமல், ஏற்றப் படாமல் இருக்கும் நிலையில் வரியை வசூலிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் கவனம் செலுத்துவதன் மூலம், வேறு பலவகை களில் நிதி பெறுவதற்கு வசூலைத் தீவிரபடுத்த வாய்ப்பு இருக்கும் போது, அந்த வரியை ஆடம்பரப் பண்டங்களுக்கு மட்டும் விதிக்க லாம் என்கிற அளவுக்கு இதைக் கொண்டுவரலாம், அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர் களே, நான் இந்த மசோதாவைக் கொண்டு வரும்போது, நாட் டிலே இருக்கக் கூடிய நெருக்கடி காரணமாக செலவினங்கள் அதிகரித்திருக்கின்றன, நாட்டின் நெருக்கடி காரணமாக மத்திய சர்க்காரிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய தொகை ஏறக்குறைய 9 அல்லது 10 கோடி அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது, ஆகவே, நம்முடைய திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அதை நாம் ஈடு செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னேன். சட்ட சபையில் காலையிலிருந்து இப்பொழுது வரை உட்கார்ந்து கவனித்த வர்களுக்குத் தெரியும். கேள்வி நேரத்திலே அங்கத்தினர்கள் என்ன கேட்கிறார்கள்? எங்கள் ஊருக்கு இன்னும் மின்சாரம் வரவில்லை, அதிகமாக விஸ்தரிக்க வேண்டும், எங்கள் ஊரில் ஆஸ்பத்திரி வேண்டும், அதிகம் டாக்டர்கள் வேண்டும் என்று இப்படி இடைவிடாமல் கேட்கிறோம். ஒருவராவது, அதை நிறைவேற்ற வேண்டாம், இதை நிறைவேற்ற வேண்டாம், நெருக்கடி காரணத்திற்காக தேவையில்லை, ஒத்திவைப்போம் என்று சொல்லவில்லை. நான் இதை வரவேற்கிறேன். காரணம் என்னவென்றால், நெருக்கடி காரணமாக ஒத்திவைக்காமல், எப்படியோ சமாளித்து திட்டங்களை நிறைவேற்றத்தான் வேண்டும். நெருக்கடி காரணமாக திட்டங்களைச் செய்யாமல் இருக்கலாம். ஆனால் பின்னால், தொல்லை கொடுக்கும், தொந்தரவு கொடுக்கும், 'அக்யுமுலேட்' ஆகி, பின்னால் நம்மையே அழித்து விடும் அளவுக்கு பிரச்சினைகள் வளர்ந்துவிடும். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இன்றைக்கு நெருக்கடி இருந்தாலும், மத்திய சர்க்காரிலிருந்து கிடைக்கக் கூடிய நிதிகள் குறைந்தாலும், ஓரளவு நம்முடைய திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க நட வடிக்கை எடுக்க வேண்டும். அத்தியாவசியத் தேவைகளைத்தான் செய்ப முற்படுகிறோம். அவசியமற்ற வேலைகளைச் செய்வதில்லை. சில கட்டடங்களை நிறுத்தி வைக்கிறோம். ஆனால் அத்தியாவசிய மாகப் பூர்த்தி செய்யவேண்டிய திட்டங்களைச் செய்துதான் ஆக வேண்டும். உணவு உற்பத்தி விஷயத்திலே, மேற்கொண்டு யுத்தத்திற்கு சாதகமாக பல்வேறு பண்டங்களை தயார் செய்ய மேற்கொண்டு நிதி வேண்டும் என்றால் அதைத் திரட்ட முன் வந்திருக்கிறோம். அந்த வகையில் எட்டு கோடி ரூபாய் அளவுக்கு வரி விதிக்க வேண்டியிருக்கிறது. இதிலே பலவித அபிப்பிராயங்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [12th November 1965

கள் சொல்லப்பட்டன. வரி ஏய்ப்பைத் தடுத்து இதை ஓரளவுக்குச் சமாளிக்க முடியும் என்று கூறப்பட்டது. வரி ஏய்ப்பைத் தடுக்கவேண்டியது உண்மைதான். ஆனாலும், கடந்த ஆண்டு பட்ஜட்டிலே ரூ. 33 கோடி என்று கொடுத்திருந்தால், அது அதற்கு முன்பெல்லாம் ஏய்ப்பினால் விட்டுப்போன தொகைகளை ஒரு ஆண்டில் வசூல் செய்ததால் வந்த தொகை அது. அதனால் ஆண்டுதோறும் ரூ. 33 கோடி வந்துவிடும் என்று அர்த்தம் இல்லை. இப்பொழுது 64-65-க்கு 25 கோடிதான் விற்பனை வரி மூலமாகக் கிடைத்தது. மேற்கொண்டு சென்ற ஆண்டு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டதால் பழைய வரிகளை வசூல் செய்ததால் இன்றைக்கு நமக்கு ஓரளவுக்குக் கிடைத்திருக்கிறது. (குறுக்கீடு.) சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், மற்றதையெல்லாம் சேர்த்துச் சொல்கிறீர்கள். இது ஜெனரல் சேல்ஸ்டாக்ஸ் மட்டும்தான். அதிலே நமக்கு ரூ. 25 கோடியே 90 லட்சம் ரூபாய்தான் வருமானம். ஆனால், நாம் இன்றைக்குக் கணக்கெடுத்துப் பார்ப்போமானால், பல ஆண்டுகளாக வசூலிக்கப்படாமலிருந்த பாக்கியை வசூலித்ததால் அவ்வளவு உயர்ந்ததே தவிர, ஆண்டுதோறும் அப்படி வரும் என்று சொல்வதற்கில்லை. ஆகையால், இன்று நாம் கொண்டு வந்திருக்கும் வரியானது நாட்டினுடைய தேவைக்கு மிக அத்தியாவசியமானது. கூடுமானவரையில் பாதிக்கப்படாத முறையில் இருக்கவேண்டும் என்றுதான் உணவுப் பொருள்களுக்கு வரியை அதிகரிக்கவில்லை. சிறு வியாபாரிகளுக்கு 'கம்பவுண்டிங் ரேட்' டையும் அதிகரிக்கவில்லை. இரண்டு சதவீதம் இருந்ததை 2½ சதவீதமாகச் செய்யும்போது அவர்களுடைய கம்பவுண்டெட் டாக்சை 25 சதவீதம் உயர்த்தித்தான் இருக்க வேண்டும். ஆனால், ரூ. 50,000 அளவிற்கு வியாபாரம் செய்கிற சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் அவர்களுக்கு அந்த Compounded tax ஐ அதிகரிக்கவில்லை. அதேவிதமாக இருக்க வேண்டும் என்றுதான் நிர்ணயித்திருக்கிறோம்.

கனம் உறுப்பினர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பேசும்போது, "செக்-போஸ்டில் சில கஷ்டங்கள் இருக்கின்றன" என்று சொன்னார்கள். பட்ஜெட் விவாதம் நடக்கும்போது இதையெல்லாம் சொல்வது வழக்கம். பட்ஜெட் விவாதம் அல்லாத நேரத்திலே இதைச் சொல்லவேண்டுமென்றால், தனியாகக் கடிதம் எழுதித்தான் சொல்லவேண்டும். விற்பனை வரி சம்பந்தமாக இந்த வரி உயர்வு செய்கிறபோது, பொதுவான பிரச்னைகள் எல்லாவற்றையும் நாம் எடுத்துச் சொல்வதன் மூலமாகப் பரிகாரம் காணுவது கஷ்டம். ஆகவே, அவர்களுக்கு இது சம்பந்தமாக ஏதாவது கஷ்டங்கள், குறைகள் இருக்குமானால் அதை எழுதியனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். எனக்குத் தெரிந்த அளவில், இன்றைக்கு check-posts administration நல்ல அளவிற்கு மாற்றியமைக்கப்பட்டு confiscation செய்யாமல், அந்த இடத்திலேயே பணத்தை advance tax ஆகப் பெற்றுக் கொண்டு, அவர்கள் சரக்கு

12th November 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

களை எடுத்துக்கொண்டு போகலாம் என்ற ஏற்பாடு செய்திருக்கிறோம். அவ்வாறு எடுத்துக்கொண்டு சென்று, வரி கொடுத்தாய்விட்டது என்று நிரூபித்துவிட்டால், அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம் (refund) செய்துவிடுகிறோம். அதை வரியாக வசூல் செய்வதில்லை. அட்வான்ஸாகத்தான் வசூலிக்கிறோம். சமீபத்தில் டாக்டர் லோகநாதன் அவர்களை நியமித்து இது சம்பந்தமாக ஆராயச் சொன்னோம். அவர்களுடைய preliminary report நேற்றுதான் வந்திருக்கிறது. அவர்கள் கூட, செக்-போஸ்ட் சம்பந்தமாக, "I am glad to note that there has been considerable improvement in the operation of the check-posts. The Trade Associations admitted that the situation has improved recently and there have been very few complaints." என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குப் பல துறைகளில் அதைக் கஷ்டம் இல்லாத முறையில்தான் மாற்றி அமைத்திருக்கிறோம்.

வரி ஏய்ப்பு என்பது எல்லா நாடுகளிலும், எல்லா இடங்களிலும் இருக்கிறது. இன்றைக்கு நாட்டினுடைய நெருக்கடி நிலை, நாட்டில் இருக்கக்கூடிய ஒரு பெரிய விழிப்பு இதையெல்லாம் ஒட்டி, வர்த்தக சமூகம் ஓரளவு இதில் ஒத்துழைப்பார்கள் என்று நம்புவது இந்தச் சந்தர்ப்பத்தில் நியாயமானது. ஏனென்றால், நாட்டில் எங்கும் ஒரு தேச பக்தி உணர்வு எழுந்திருக்கும்போது, ஒரு சமூகத்தினர் அவ்வாறு தாங்களே ஒத்துழைப்பதாகச் சொன்னால், அதை நாம் தவறு என்று சொல்லி ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வது சரியாகாது. எந்த அளவிற்கு அவர்கள் ஒத்துழைக்கிறார்கள் என்பதை நாம் பார்த்துத்தான் செய்யவேண்டும். சர்க்காருக்கு என்றைக்கும் சட்டம் செய்யும் அதிகாரம் இருக்கிறது. அதை யாரும் நிறுத்த முடியாது. ஒன்று மாத்திரம் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் இருக்கிற வர்த்தக சமூகம் ஒரே ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுவார்களானால், பிரச்னை இல்லாமல் தீர்ந்துவிடும். பில் போடாமல் சரக்குகளை விற்பதில்லை என்பது முக்கியமானது. இரண்டாவது, அந்த பில்களிலேயே விற்பனை வரியைக் குறித்துவிடவேண்டும். விற்பனை வரி எவ்வளவு என்பதைப் பில்களிலேயே கண்டுவிடவேண்டும். இந்த இரண்டு காரியங்களையும் அவர்கள் தவறாமல் செய்துவிடுவார்களானால், நிச்சயமாக இன்றைக்கு வர்த்தக சமூகத்திற்கும் எந்தவிதமான கஷ்டம் ஏற்படாது ; சர்க்காருக்கும் எந்தவிதமான தொல்லையும் ஏற்படாது; மக்களுக்கும் வரிப் பளு அதிகரிக்காமல் இருக்க முடியும்.

கனம் சுதந்திரா கட்சித் தலைவர் திரு. கணேசன் அவர்கள் பேசுகிறபோது, இந்த வரி கூடிக்கொண்டே போய் கடைசியில் அதிகமாகப் போகிறது என்று சொன்னார்கள். நம்முடைய சமுதாயத்தில் அது ஒரு பெரிய தவறு என்றுதான் சொல்லவேண்டும். நம்முடைய சமுதாயத்தில் இருக்கும் கேடு என்றே

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [12th November 1965

நான் சொல்வேன். வளர்ச்சி பெற்ற நாடுகளில் சாதாரணமாக என்ன நடக்கிறது? மொத்த வியாபாரியிடமிருந்து சில்லரை வியாபாரிக்கு ஒரே ட்ரான்சாக்ஷன்தான். இன்னும் சொல்லப்போனால், ஜெனரல் ஸ்டோர் என்று வைத்து, அவர்கள் ந்யூ யார்க்கிலிருந்து சான்பிரான்சிஸ்கோவரையிலும்—3,000 மைலுக்கு எல்லா இடங்களிலும் கடைகள் வைத்து, அவர்கள் தங்களுடைய ஸ்டோர்களிலேயே பொருள்களை விற்கிறார்கள். நம் நாட்டில் நிலைமை என்னவென்றால், முதலில் ஒருவர் வாங்கி அவர் மற்றவருக்கு விற்று அவர் இன்னொருவருக்கு விற்றுக்கொண்டே போவது என்ற நிலை இருக்கிறது. இதனால் விலை கூடிக்கொண்டே போகிறது. இது யாருடைய தவறு? இதைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான், நாம் கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று சொல்கிறோம். ஹோல்ஸேலர்ஸ், ரீடெய்லர்ஸ் என்று வரும்போது middle men ஏற்படுவார்களே தவிர, கூட்டுறவு இயக்கத்தில் middle men ஏராளமாக இருக்க மாட்டார்கள். இடையிலே இருக்கிறவர்கள் கூட்டுறவு இயக்கத்தை விடமாட்டேன் என்கிறார்கள். தனியார்த் துறையில் நஷ்டம் ஏற்படுவதே இல்லையா? அங்கும் நஷ்டம் ஏற்படும். அதைக் கேட்க ஆள் இல்லை. ஆனால் கூட்டுறவுத் துறையில் நஷ்டம் வந்துவிட்டால், 'நஷ்டம் வந்துவிட்டது', 'நஷ்டம் வந்துவிட்டது' என்று பறை சாற்றுவதாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் நஷ்டம் வந்துவிட்டால், அதை மிகைப்படுத்திச் சொல்லி, அதிலும் அவரவர்கள் தங்கள் சொந்த லாபத்திற்கு அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பார்ப்பதும் இல்லாமல் இல்லை. இம்மாதிரியான நிலைமை நம்முடைய நாட்டில் இருப்பதால்தான், பொது மக்கள், பாமர மக்கள் அதிகமாக வரி கொடுக்கும் நிலை இருக்கிறது. இந்த நெருக்கடியை ஒட்டியாவது, இன்றைக்கு நடுத் தரகர்கள் என்று கூறிக்கொண்டு பொருள்களை வாங்கி வாங்கி விற்றுக்கொண்டிருப்பதையே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நாம் இடமில்லாமல் செய்துதான் நம்முடைய நாட்டில் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான கடமையாகும். பண்டம் உற்பத்தி செய்கிறார்களே அவர்களுக்கு எல்லாவிதமாக சலுகைகளும் கொடுப்பது நியாயம். பண்டங்களை வாங்கிப் பயன்படுத்துகிறார்களே அவர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டியதும் நியாயமானதே. ஆனால், இடையிலே சிலர் இருந்துகொண்டு பொருள்களை ஓரிடத்தில் வாங்கி இன்னொருவருக்கு விற்றுக்கொண்டே இருப்பதைத் தங்களுடைய பிழைப்பாகக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும். இடைத்தரகர்களின் எண்ணிக்கையை எந்த அளவுக்கு நாம் குறைக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட முடியும். இதை நான் குறிப்பாக இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது போல, இந்த வரிகளெல்லாம் நெருக்கடி நிலை தீர்ந்தவுடன்

12th November 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

பரிசீலிக்கப்படும். இந்த வரிகள் எந்த அளவிற்கு இருக்க வேண்டும், அவசியமானவைதானா, எந்த வரி இருக்கவேண்டும் என்பதெல்லாம் நெருக்கடி நிலைமை முடிந்தவுடன் நன்றாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, வேர்கடலை புதிய வரி விதிப்பு இனத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அல்லது உணவுப் பண்டம் என்று கருதப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடலைக்கு பல முனை விற்பனை வரி இருக்கிறது.

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965 (L.A. Bill No. 36 of 1965), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2

MR. SPEAKER : The question is—

"That Clause 2 do stand part of the Bill."

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move the following amendment :—

"In clause 2 of the Bill, *delete* sub-clause (*a*)."

The amendment was duly seconded.

* **திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் இரண்டாவது ஷரத்தில் 2 சத விகிதம் பல முனை விற்பனை வரி என்றிருப்பதை 2½ சதவிகிதம் ஆக உயர்த்தியிருப்பது நெருக்கடி காலத்திற்கு என்றும், இந்த வரிகள் 'பின்னால் பரிசீலிக்கப்படும்' என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 'பின்னால் பரிசீலிக்கப்படும்' என்றுதான் கூறினார்களே தவிர, 'குறைக்கப்படும்' என்பதற்கு ஒருவிதமான வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை. பின்னால் பரிசீலிக்கப்படும் என்பதிலே இந்தத் தர வித்தியாசங்கள் மாற்றியமைக்கப்படுமேயொழிய, வரி குறைக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. ஆகவே, இந்த வரியை ½ சத விகிதம் ஏற்றுவதன் மூலமாக, கனம் அங்கத்தினர்கள் அனைவரும் கூறியதுபோல், விலைவாசிகள் உயரத்தான் செய்யும். இன்றைய சமுதாய அமைப்பில், வியாபாரிகள் இருக்கும் முறையைப் பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இடையிலே இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இந்த விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாததாக இருக்கிறது, மேல் நாடுகளில் இப்படி இல்லை என்று கூறினார்கள். அந்த முறையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு அமைச்சர் அவர்களிடத்திலேதான் இருக்கிறது. ஆகவே, அந்த முறை இருக்கிற வரையில் அதனால் விலைவாசி உயரத்தான்

[திரு. து. ப. அழகமுத்து] [12th November 1965

செய்யும். அப்படி உயரும்போது, வருமானம் குறைவாக இருக்கிற ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். ஆகவே, அவர்களுடைய நன்மையை உத்தேசித்தாவது, இந்த நெருக்கடி நோக்கில் இந்த வரியை ½ சத விகித அளவுக்கு உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி என் உரையை முடிக்கின்றேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பல முனை வரியிலே ½ சத விகிதம் போடுவதன் மூலமாக நாம் எதிர்பார்ப்பது ஒரு கணிசமான தொகையாகும். இதை விட்டுவிட்டால், இந்தச் சட்டத்தையே விட்டுவிடலாம். Financial aspect என்று சொல்வதைப் பொறுத்து, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

இரண்டாவதாக, இந்தப் பண்டங்கள் மீது வரி போடுவதால் ஓரளவு விலைவாசி ஏறும் என்பதை நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். விலைவாசி ஏறாது என்று சொல்ல முடியாது. ஆனால், நெருக்கடி நோக்கில், மக்கள் கடமை என்னவென்றால், இந்தப் பண்டங்களை அவர்கள் உபயோகிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பண்டங்களின் உபயோகத்தை அவர்கள் சற்றுக் குறைத்துக்கொண்டு தங்களைப் பாதிக்காத அளவிற்குச் செய்து கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாக
1-00 p.m. நாட்டுக்கு நன்மை ஏற்படும். இந்தப் பண்டங்கள் சேமிக்கப்பட்டு, பல துறைகளில் தேசப் பாதுகாப்பிற்குப் பயன்படும்.

ஆகவேதான் ஒரு நிர்பந்த நிலையில் இதை அவசியமாகப் போட வேண்டியதாக இருக்கிறதென்றாலும், இதனால் நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clauses 3 to 7 were put and carried.

Clause 1

MR. SPEAKER: The question is—

"That clause 1 do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"In sub-clause (1) of clause 1, *for* the brackets and words '(Third Amendment)' *substitute* the brackets and words (Second Amendment)'."

12th November 1965] [Sri R. Venkataraman]

நாம் இரண்டாவது திருத்த மசோதாவாக இருந்ததை வாபஸ் பெற்றுவிட்டதனால், மூன்றாவது திருத்த மசோதாவாக இருந்ததை இரண்டாவதாகத் திருத்த வேண்டும் என்பது என் திருத்தம். இது பார்மல் அமெண்ட்மெண்டு. ஏற்றுக்கொள்ள வேண்டும்.

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

The Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That the Madras General Sales Tax (Third Amendment) Bill 1965 (L.A. Bill No. 36 of 1965), as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

III.—ANNOUNCEMENTS.

(1) THE GLANDERS AND FARCY (MADRAS AMENDMENT) BILL, 1965.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to consideration by the Madras Legislative Assembly of the Glanders and Farcy (Madras Amendment) Bill, 1965.

II.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE GLANDERS AND FARCY (MADRAS AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 39 OF 1965).

THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Glanders and Farcy (Madras Amendment) Bill, 1965 [a] (L.A. Bill No. 39 of 1965), be taken into consideration."

The South African Horse Sickness is a highly infectious disease affecting horses, mules and asses. The disease is highly fatal and is peculiar to South Africa. The Glanders and Farcy Act, 1899 (Central Act XIII of 1899) restricts the spread of the above disease. Although no case of the disease has so far been reported in this State, it is feared that unless appropriate preventive and remedial measures are taken in advance, there might be an outbreak of the said disease among horses in this State through the

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th November 1965.

[Sri P. Kakkan] [12th November 1965

bringing into the State from outside or the transport from one place to another within the State of infected horses. It is also considered necessary to have all horses in any specified area to which the Act is made applicable compulsorily vaccinated in order to prevent the spread of the disease. As there is no provision in the Glanders and Farcy Act for this, the Government have decided to introduce in the Act a provision similar to section 5 of the Madras Rinderpest Act, 1940 (Madras Act XIX of 1949). New section 3-A proposed to be inserted by clause 2 provides for this. Provision is also made in clause 3 to penalise any person who fails to comply with the terms of any notification issued under section 3-A by amending section 13 of Central Act XIII of 1899. It is also considered necessary to exempt animals belonging to or under the control or possession of the Armed Forces of the Union so as to avoid delay in the movement of troops as normally, the animals of the Defence Department are protected against South African Horse Sickness as a routine measure and inspected before and after any journey undertaken by them.

The Bill is thus a simple and non-controversial one. I therefore request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER: The question is—

"That the Glanders and Farcy (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 39 of 1965), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI P. KAKKAN: Sir, I move—

"That the Glanders and Farcy (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 39 of 1965) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS PRESERVATION OF PRIVATE FORESTS (CONTINUANCE) BILL, 1965 (L.A. BILL NO. 37 OF 1965).

*THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras Preservation of Private Forests (Continuance) Bill, 1965 a (L.A. Bill No. 37 of 1965), be taken into consideration."

The Madras Preservation of Private Forests Act was first enacted in the year 1946 with a view to prevent indiscriminate destruction of private forests and interference with customary and

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 6th November 1965.

12th November 1965] [Sri N. Nallasenapathi Sarkarai Manradiar]

prescriptive rights therein. The Act, as it stands now, is the Madras Preservation of Private Forests Act, 1949 (Madras Act XXVIII of 1949) which applies to forests situated in estates as defined in the Madras Estates Land Act, 1908 (Madras Act I of 1908) and to private forests situated in other areas in the State of Madras and having a contiguous area exceeding thirty acres which may be declared by the District Collector to be forests for the purposes of the Act by notification in the District Gazette.

The Act was originally enacted as a temporary measure for a period of two years with effect from 3rd December 1946. But later, the life of the Act was extended from time to time by means of amending Acts. Under the latest amendment made last by Madras Act 23 of 1963, the life of the Madras Preservation of Private Forests Act, 1949, was extended up to the 2nd December 1965.

Under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), large areas hitherto under private forests in iruvaram villages and minor inams in South Arcot, Salem and Tirunelveli districts will vest in the Government. But even after the enforcement of these two enactments, there will still be some private forests not governed by either of them in the North Arcot, Coimbatore, Madurai, Ramanathapuram, the Nilgiris, Salem and Tirunelveli districts.

The need for undertaking a comprehensive legislation in respect of private forests has been carefully re-examined. The Government have decided that such a comprehensive legislation is not necessary and that the provisions of the Madras Preservation of Private Forests Act, 1949, are sufficient to regulate the working of the remaining private forests in this State. As no comprehensive legislation is proposed to be brought up, the Government consider that it is not necessary to keep the Madras Preservation of Private Forests Act, 1949, which expires on the 2nd December 1965, as a temporary Act by extending its life periodically and that the Act may be made a permanent one.

I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER: The question is—

"That the Madras Preservation of Private Forests (Continuance) Bill, 1965 (L.A. Bill No. 37 of 1965), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 5 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I move—

"That the Madras Preservation of Private Forests (Continuance) Bill, 1965 (L.A. Bill No. 37 of 1965), be passed."

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS FOREST (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 39 OF 1964.)

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

That the following amendments made by the Legislative Council to the Madras Forest (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 39 of 1964), as passed by the Legislative Assembly, be taken into consideration :—

Amendments.

1. In the enacting formula, *for* the words 'Fifteenth Year', *substitute* the words "Sixteenth Year".

2. *Clause 1.*—In sub-clause (1) of clause 1, *for* the figures '1964' *substitute* the figures "1965".

3. *Clause 3.*—In the Explanation proposed to be added by sub-clause (iii) of clause 3, *for* the words 'the property of landholders such as *jenmies*, *Devaswoms* or holders of inam lands', *substitute* the words '*the property of jenmies or Devaswoms*'.

4. *Clause 4.*—*For* the heading to new section 40-B *substitute* the heading "*Notice to claimants of timber collected under section 40-A.*"

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தங்கள் எல்லாம் சட்டம் கொண்டுவந்த பிறகு ஏற்பட்ட மாறுதல்களை நிறைவேற்றுவதற்குக் கொண்டுவரப் பட்டவைதான். முதலாவது, 15-வது வருஷம் என்பதை 16-வது வருஷம் என்று மாற்றுகிறோம். அடுத்தபடியாக ஜன்மீஸ், தேவஸ்வாம்ஸ், ஹோல்டர்ஸ் ஆப் இனாம் லேண்ட்ஸ் என்பதையெல்லாம் எடுத்துவிட்டு புதுச்சட்டத்தை யொட்டித் திருத்தியிருக்கிறோம். தலைப்பிலே
யொட்டித் திருத்தியிருக்கிறோம். தலைப்பிலே 'Notice to claimants of drift timber' *என்று இருந்தது. அது அவசியமில்லை என்ற காரணத்தால் அதை மாற்றி இருக்கிறோம். மற்றபடி இவையெல்லாம் ரொடீன் அமெண்ட்மெண்ட்ஸ் என்று சொல்லி நான் இதைப் பிரேரேபிக்கிறேன்.*

The motion was put and carried and the amendments were taken into consideration.

Clauses 3, 4 and 1 and the Enacting Formula, as amended by the Legislative Council, were put and carried.

III.—ANNOUNCEMENTS—*cont.*

(2) BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that I have received messages from the Hon. Chairman, Madras Legislative Council, that the following Bills have been passed by the Legislative Council, without any amendment :—

(1) The Indian Partnership (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 27 of 1965).

(2) The Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965).

Now the House will adjourn *sine die*.

The House then adjourned *sine die*.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

'*Nil*'

B. Reports, notifications and other papers

98. *Notification issued with G.O. Ms. No. 4108, Industries, Labour and Co-operation (Labour), dated the 20th August 1965 amending the rules 4, 6, 7 and 8 of the Madras Factories Rules, 1950, published with the late Development Department Notification, dated the 15th March 1950, at pages 103 to 178 of the Rules, Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 25th April 1950, as subsequently amended, the same having been previously published as required by section 115 of the Factories Act, 1948 (Central Act LXIII of 1948).*

* 99. *Annexure to the Madras University (Amendment)* **Bill,** 1965 (*L.A. Bill No. 42 of 1965*).

* Placed on the Table of the House on 11th November 1965.

APPENDIX.

[*Vide* answer to starred question No. 504 on page 957.]

Statement showing the number of houses/flats/apartments/tenements/hutments constructed and let out on payment of rent.

Agency.	Name of the Scheme.	Area.	Number of houses/flats/apartments/tenements/hutments let out.	Details of rent collected.	Remarks.
(1	(2)	(3)	(4)	(5)	(6)
				RS. PER MONTH.	
1 Scheme undertaken by former City Improvement Trust.	..	1 Cox Square ..	48 F	42	Prior to formation of State Housing Board, the former City Improvement Trust undertook the construction of these houses.
		2 C.I.T. Nagar ..	125 H	10 to 150	
		3 Cox Colony ..	80 T	3	
		4 Nandanam ..	91 H	50 to 120	
		5 Mandavelipakkam ..	5 H	53 to 62	
		6 Do. ..	12 F	100	
		7 Trustpuram ..	2 H	3 and 14	
		8 Foreshore ..	8 R	30	
		9 Kilpauk ..	10 R	30	
		10 Single Persons' Quarters (Opposite to S.H.B. Office).	10 R	60	
		11 C. I. T. Nagar ..	43 H	5 to 30	Hutments.
2 Madras Housing Unit.	Slum Improvement/Clearance Scheme.	1 Kamarajapuram	32 T	10 * (for items 1–11)	* In G.O. Ms. No. 185, Industries, Labour and Co-operation (Housing), dated 10th January 1963, the Government have directed that a rent of Rs. 10 per mensem per tenement will be charged for these tenements.
		2 Ellispuram	30 T		
		3 Urur Part I	40 H		
		4 Foreshore Slum	72 T		
		5 Kasipuram 'A' Block.	375 T		
		6 Thandiarkuppam	59 T		
		7 Chandrayogi Samadhi.	96 T		
		8 Thandavarayachatram.	434 T		
		9 Venkatesapuram.	136 T		
		10 Ramakamathpuram.	32 T		
		11 Vannanthurai Road.	6 T		
	Middle Income Group Housing Scheme.	1 Foreshore Estate.	60 F Foreshore—	See below	
		2 Lloyds Road.	84 F Lloyds Road—	See below	

Rent per month per flat.

	'A' type. RS.	'B' type. RS.	'C' type. RS.
Foreshore— Ground Floor	256	128	No 'C' type in Foreshore Estate.
First Floor	249	123	
Second Floor	242	118	
Lloyds Road— Ground Floor	262	172	142
First Floor	255	165	135
Second Floor	248	158	128

Agency.	Name of the Scheme.	Area.	Number of houses/flats/apartments/tenements hutments let out	Details of rent collected.	Remarks.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)		
					Rent per month per flat.		
					'A' type.	'B' type.	'C' type.
				RS. PER MONTH.	RS.	RS.	RS.
2. Madras Housing Unit—*cont.*	Union Government Rental Housing Scheme.	1 Foreshore Estate. 2 Kilpauk Garden. 3 Lloyds Road.	668 A 96 F 96 F	10 per cent of pay plus H.R.A. to be collected from the allottee.	The maximum rent for Foreshore has however been fixed as Rs. 30 per apartment.		
3 Coimbatore Housing Unit.	M.I.G.H.	Coimbatore.	24 F	Ground Floor First Floor Second Floor	175 170 165		
	S.I.H.S.	Coimbatore.	92	Rs. 12·50.			
4 Madurai Housing Unit.	S.I.H.S.	Pasumalai.	200 T	Rs. 15.			
5 Tiruchi Housing Unit.	Slum Improvement/Clearance Scheme.	Tiruchi.	40	Rs. 10.			

F=Flat.
H=House.
T=Tenement.

R=Rooms (Single person quarters).
S.I.H.S.=Subsidised Industrial Housing Scheme.
M.I.G.H.=Middle Income Group Housing Scheme.

இணைப்பு.

கட்டி முடிக்கப்பட்டு, வாடகைக்கு விடப்பட்டுள்ள வீடுகள்/மாடிக் கட்டிடங்கள்/அறைகள்/குடியிருப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் காட்டும் அறிக்கை.

திறுவனம்.	திட்டத்தின் பெயர்.	பரப்பளவு.	வீடுகள்/மாடிக் கட்டிடங்கள்/அறைகள்/குடியிருப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை.	வசூலிக்கப்பட்ட வாடகையின் விவரம்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1 முன்னாள் (நகர வளர்ச்சிக் குழுவினரால்) மேற்கொண்ட திட்டங்கள்.	..	1 காக்ஸ் ஸ்கொயர் (Cox Square).	48 F	ரூ. 42 ஒரு மாதத்திற்கு.	மாநில வீட்டு வசதி வாரியம் ஏற்படுவதற்குமுன், நகர வளர்ச்சிக் குழு இவ் வீடுகளைக் கட்டும் பணியை மேற்கொண்டது.
		2 C. I. T. நகர்.	125 H	ரூ. 10-லிருந்து ரூ. 150 வரை.	
		3 காக்ஸ் காலனி.	80 T	ரூ. 3.	
		4 நந்தனம்.	91 H	ரூ. 50-லிருந்து ரூ. 120 வரை.	
		5 மந்தவெளிப்பாக்கம்.	5 H	ரூ. 53-லிருந்து ரூ. 62 வரை.	
		6 மந்தவெளிப்பாக்கம்.	12 F	ரூ. 100.	
		7 டிரஸ்டுபுரம்.	2 H	ரூ. 3-ம், ரூ. 14-ம்	
		8 கடற்கரை எஸ்டேட்.	8 R	ரூ. 30.	
		9 கீழ்ப்பாக்கம்.	10 R	ரூ. 30.	
		10 வீட்டு வசதி வாரிய அலுவலகத்திற்கு எதிரிலுள்ள தனி நபர்களுக்கான குடியிருப்பிடம்.	10 R	ரூ. 60.	
		11 C. I. T. நகர்.	43 H (குடிசைகள்)	ரூ. 5-லிருந்து ரூ. 30 வரை.	

நிறுவனம். (1)	திட்டத்தின் பெயர். (2)	பரப்பளவு. (3)	வீடுகள்/மாடிக் கட்டிடங்கள்/அறைகள்/குடியிருப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. (4)	வசூலிக்கப்பட்ட வாடகையின் விவரம். (5)	குறிப்புரை. (6)
2 சென்னை வீட்டு வசதி பிரிவு.	சேரி வளர்ச்சி/ஒழிப்புத் திட்டம்.	1 காமராஜபுரம்.	32 T		* இங்கு குடியிருப்பவர்களுக்கு ஒரு குடியிருப்புக்கு ரூ. 10 வீதம் வாடகை வசூலிக்கும்படி அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.
		2 எல்லிஸ்புரம்.	30 T		
		3 யூரூர் பகுதி.	40 H		
		4 கடற்கரை சேரி பகுதி.	72 T		
		5 காசிபுரம் 'A' பிரிவு	375 T	* ரூ. 10.	
		6 தண்டையார் குப்பம்.	59 T		* தொழில்—தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 10—1—1963 தேதியுள்ள 185-ம் எண் அரசாங்க ஆணையைப் பார்க்கவும்.
		7 சந்திரயோகிசமாதி	96 T		
		8 தாண்டவராய சத்திரம்.	434 T		
		9 வெங்டேசபுரம்.	136 T		
		10 ராமகாமத்புரம்.	32 T		
		11 வண்ணான்துறை சாலே.	6 T		
	நடுத்தர வருமானமுள்ள பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்.	1 கடற்கரைப் பகுதி.	60 F	* ரூ. 10.	ஒரு மாடிக் கட்டிடத்திற்கு ஒரு மாத வாடகை. A பிரிவு ரூபாய். / B பிரிவு ரூபாய். / C பிரிவு ரூபாய். கடற்கரைப் பகுதியில் C பிரிவு இல்லை. தள அடுக்கு .. 256 / 128 முதல் தள அடுக்கு 249 / 123 இரண்டாம் தள அடுக்கு. 242 / 118
		2 லாயட்ஸ் ரோடு.	84 F		தள அடுக்கு .. 262 / 172 / 142 முதல் தள அடுக்கு 255 / 165 / 135 இரண்டாம் தள அடுக்கு. 248 / 158 / 128
	மத்திய அரசாங்க வாடகை வீட்டு வசதித் திட்டம்.	1 கடற்கரை எஸ்டேட்	668 A		
		2 ஈழ்ப்பாக்கம்.	96 F		
		3 லாயட்ஸ் ரோடு.	96 F		ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளவர்களிடமிருந்து அவர்களுடைய சம்பளத்தில் 10 சதவீதமும், வீட்டு வாடகைப் படியையும் வசூலிக்க வேண்டும். கடற்கரை எஸ்டேட் வீடுகளுக்கான உச்ச வாடகை ஒரு கட்டிடத்திற்கு ரூ. 30 என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
3 கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு.	நடுத்தர வருமான பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்.	கோயம்புத்தூர்.	24 F		ஒரு கட்டிடத்திற்கு ஒரு மாத வாடகை. ரூ. பை. தள அடுக்கு .. .. 175 00 முதல் தள அடுக்கு .. 170 00 இரண்டாம் தள அடுக்கு .. 165 00
	உதவித் தொகை அளிக்கப்பட்ட தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.	கோயம்புத்தூர்.	92 T		12 50
4 மதுரை வீட்டு வசதிப் பிரிவு.	உதவித் தொகை அளிக்கப்பட்ட தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.	பசுமலே.	200 T		15 00
5 திருச்சிராப்பள்ளி வீட்டு வசதிப் பிரிவு.	சேரி வளர்ச்சி/ஒழிப்புத் திட்டம்.	திருச்சிராப்பள்ளி.	40		10 00

V211, 31 'N65
N65.32.9
64929

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY

Messrs. ACCOUNT TEST INSTITUTE, EGMORE, MADRAS
Messrs. HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, MADRAS-5.
Sri. S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
Messrs. THE FREE INDIA CO-OPERATOR'S AGENCY, Madras-4.
Messrs. THE EDUCATIONAL AGENCIES, BOOK SELLERS, Madras-15
Messrs. UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET Madras-3.
Messrs. RUKMINI CORPORATION, VEPERY Madras-7.

IN MUFASSAL OF MADRAS STATE.

Sri. K. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
Messrs. THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHER AND BOOK-SELLER, Madurai
J.J.M. BOOK DEPOT AND STATIONERY EMPORIUM, MADURAI.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. MUTHAMIZH MANRAM, Mayuram.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukottai, Tiruchirappalli district.
Messrs. K. PALANI & Co. Clock Tower, Pudukottai.
Messrs. S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli district.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli district.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs NELLAI PUTHAKA NILAYAM BOOK-SELLERS, 10, Thana Muna Buildings Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri. V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. THE EDUCATIONAL SUPPLIES COMPANY, Coimbatore (R.S. Puram).
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Sri M. PALANI & Co., Tiruchirappalli.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem-1.
Messrs. T. CHELLARAM & SONS, BOOK-SELLERS AND STATIONERS, Market, Ootacamund.
Messrs. K. M. K. BROTHERS, BOOK SELLERS, Ootacamund.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukottai.
Messrs. SANTHI & Co., Tambaram

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK SELLERS, Guntur.
Messrs. JAIN AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

(1)	(2)	(1)	(2)